1-6-'57

228

# கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை




24 JUL 1957

# செய்திகள்

## வளரும் எழுத்தாளர் சங்கம், திருச்சி

இளம் எழுத்தாளர் சங்கம் என்பதை வளரும் எழுத்தாளர் சங்கம் எனப் பெயரிட்டு, திருச்சியில் உள்ள இளம் எழுத்தாளர்கள் ஒரு சங்கத்தைத் துவக்கியுள்ளார்கள். இதுவரை நாட்டின் பல பாகங்களிலிருந்தும் சுமார் 130 எழுத்தாளர்கள் வரையில் அங்கத்தினராகியுள்ளனர். இச்சங்கத்தின் ஆரம்ப விழா ஜூலை மத்தியில் திருச்சியில் நடைபெறும். வளரும் எழுத்தாளர்களுக்கு ஊக்கம் அளிக்கும்பொருட்டு, கவிதை, கட்டுரை, சிறுகதை ஓரங்க நாடகம் ஆகிய நாலு பிரிவுகளிலும் போட்டி நடத்தி, சிறந்தவற்றிற்குப் பரிசுகள் வழங்கப்படும். ஆரம்பவிழா மலரில் இவை பிரசுரமாகும். இந்தப் போட்டியின் முடிவு 25 - 6 - 57. இதில் கலந்து கொள்பவர்கள் தங்கள் எழுத்தோவியங்களை, 'செயலாளர், வளரும் எழுத்தாளர் சங்கம், 41, எடத் தெரு, திருச்சிராப்பள்ளி' என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும். மற்ற விவரங்களையும் நிபந்தனைகளையும் மேற்கண்ட முகவரிக்கு எழுதினால் அனுப்பப்படும். தலைவர்: பாரதி தங்கராசன், துணைத் தலைவர்: தே. பார்த்தசாரதி, செயலாளர்: எஸ்.பி. அமலன். துணைச் செயலாளர்: ஜென்மி சந்திரசேகர், பொருளாளர்: கோபாகி ஆகியோர் திருச்சி மத்தியக் குழுவின் நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

## குழந்தை எழுத்தாளர் சங்கம், சென்னை

இந்தச் சங்கத்தின் புதிய ஆண்டு நிர்வாகிகளாகக் கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். தலைவர் அழ. வள்ளியப்பா, உபதலைவர்கள் நெ. சி. தெய்வசிகாமணி, தணிகை உலகநாதன், செயலாளர் பூவண்ணன், உதவி ஜெ. எத்திராஜன், பொருளாளர் எஸ். எஸ். பழனியப்பன். மற்றும் செயற்குழுவில் பி. எஸ். மணி, எஸ். வி. ரமணி. எச். வைத்தியநாதன், தம்பி ஸ்ரீநிவாசன், எஸ். கே. மூர்த்தி ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

## ஆந்திரகேசரி பிரகாசம்

ஆந்திராவின் சிங்கம் புகழ் பெற்ற பழுத்த தேச பக்தர் கனம் ஸ்ரீ பிரகாசம் தம் 86-ஆம் வயதில் காலமானார். அவர் சென்னை ராஜ்யத்தின் முதல் மந்திரியாகவும், பிரிந்து சென்ற ஆந்திர ராஜ்யத்தின் முதல் மந்திரியாகவும் இருந்திருக்கிறார்.

## கேரளாவில் கல்வி

மூன்றும் படிவம் வரையில் திருவாங்கூர், கொச்சி, மலபார் ஆகிய மூன்றும் இணைந்த கேரள ராஜ்யத்தில் எல்லாருக்கும் இலவசக் கல்வி ஏற்படுத்தப்பட்டுள்ளதாம். உயர்தரப் பள்ளிகளிலும் வருஷத்துக்கு எட்டுத் தவணைகளில் ரூ. 48 தான் கட்டவேண்டுமாம்.

## நெய்வேலி கனிவெட்டு வேலை துவக்கம்

இந்த நாட்டுக்குப் பழுப்பு நிலக்கரி புதியதோர் எரிபொருள். தென்னாட்டுக்கு இந்த எரிபொருளினால் தொழில்கள் பெருகவும் விவசாயம் செழிக்கவும் வாய்ப்புண்டு. ஆண்டு ஒன்றுக்கு 35 லட்சம் டன் பழுப்பு நிலக்கரி வீதம் நெய்வேலியில் வெட்டி எடுக்கப்படும். இதன் அங்கமாக ரசாயன எரு உர உற்பத்தியும் நடைபெறும். 70,000 டன் நைட்ரஜன் உள்ள உரம் யூரியா என்ற உருவில் தயாரிக்கப்படும். மற்றும் சுத்தமான கரிக் கட்டிகள், மோட்டார் ஸ்பிரிட், தார், பினைல், மின்சாரம், பீங்கான் பொருள்கள் முதலியன இதனோடு இணைந்த முறையில் பெரும் அளவில் உற்பத்தியாகும். நாட்டை வளமாக்கும் இந்த நல்ல பணியின் துவக்க விழாவை சமீபத்தில் பிரதம மந்திரி நேரு அவர்கள் நெய்வெலிக்கு விஜயம் செய்து நடத்திவைத்தார்.

கண்ணன்

## பொருளடக்கம்


**மலர்: 8** **இதழ்: 11**

**1 - 6 - '57**



| | |
|---|---|
| குழந்தைகளே! பக்கம் | 2 |
| தபால் பெட்டி .. | 3 |
| கடற் புலி .. | 5 |
| துப்பறியும் மோகன் .. | 7 |
| குழந்தையும் கோவிலும் .. | 13 |
| சைக்கிள் ஆசை .. | 19 |
| எறும்பரசன் .. | 23 |
| கவியரங்கம் .. | 28 |
| அந்தச் சிலை .. | 29 |
| விடுமுறைப் பேட்டி .. | 35 |
| பாடுவேமே! .. | 37 |
| நீங்களும் நானும் .. | 38 |

அட்டைப் படம்:
N. ராமகிருஷ்ணா

செய்திகள் - 2-ஆம் அட்டை



வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ. 14/25


கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

### பேனாவின் கதை



# குழந்தைகளே!

'கண்ணனை'த் தொடங்கிய இந்த எட்டு ஆண்டுகளாக உங்கள் இதயத்திலே அவன் நீங்காத இடம் பெற்றுவிட்டான். பெரியவர்களும் சரி, சிறியவர்களும் சரி, கண்ணனை ஒரு முகமாகப் பாராட்டுகிறார்கள். ராஜாஜி, கல்வி அமைச்சர் போன்றவர்கள் கண்ணன் மூலமாகத் தங்கள் கருத்துரைகளை வழங்கியிருக்கிறார்கள். பேராசிரியர்களும் பிரபலமான எழுத்தாளர்களும் கண்ணனில் எழுதி வருகிறார்கள். அதே சமயத்தில் பள்ளி ஆசிரியர்களும் மாணவர்களும் பங்கு எடுத்துக் கொண்டு வருகிறார்கள். சுருக்கமாகக் கூறினால் உங்கள் இதயத்திலே மட்டுமல்ல, தமிழ் நாட்டுக் குழந்தைகள் உலகிலேயே கண்ணன் சிறப்பான இடம் பெற்றுவிட்டான் என்பது பொருந்தும்.

இதுவரை எத்தனை எத்தனையோ புதிய புதிய பகுதிகளும் விஷயங்களும் கண்ணனில் வெளியாகியிருக்கின்றன. தொடர் கதைப் போட்டி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. சித்திரப் போட்டிகள் வைக்கிறோம். சிறுகதைப் போட்டிகள் நடத்துகிறோம். இதெல்லாம் வளரும் குழந்தைக் குலத்துக்கு எத்தனையோ தூண்டுகோலாக இருந்து வருகின்றன.

அவ்வப்போது விஞ்ஞானப் புதுமைகளும் நீங்களே செய்து பரீட்சித்துப் பார்க்கக் கூடிய விஞ்ஞானக் கருவிகளைப்பற்றிய சித்திரக் கட்டுரைகளும் வெளி வருகின்றன.

கவிதைகள் எழுதுவோருக்குக் கண்ணன் ஆரம்பம் முதலே சிறப்பான ஊக்கமும் ஆக்கமும் அளித்து வருகிறது. ஓரங்க நாடகங்கள் இதழுக்கு ஒன்று என்று வெளியிட்டு வருகிறோம். வேடிக்கைத் துணுக்குகளும் கணக்குகளும் கண்ணனில் அடிக்கடி பார்க்கலாம். தனிப்பகுதியாக வெளியிட முடியாத சுவையான விஷயங்களைத் தபால் பெட்டியில் பார்க்கலாம். ஆண்டுக்கு ஒரு முறை அருமையான மணம் கமழும் மாமலர் ஒன்றை நீங்கள் பெற்றுவருகிறீர்கள்.

கண்ணனை மாதம் மும்முறையாக்க வேண்டும் என்று நித்தமும் பத்துக் கடிதங்களாவது வந்துகொண்டேயிருக்கின்றன. அந்தக் கோரிக்கையை நிறைவேற்று முன்பாக, கண்ணனில் இந்த ஆண்டில் மேலும் பல புதிய விஷயங்களை வழங்கவேண்டும் என்பதே எங்கள் ஆசை. நீங்கள் இப்போது காட்டிவரும் ஆதரவைப் போல இன்னும் இரு மடங்கு மும்மடங்கு பெருகுவதற்கு உரிய பத்திரிகை கண்ணன். உங்கள் இல்லங்களிலும் பள்ளிகளிலும் வாசகசாலைகளிலும் நூல் நிலையங்களிலும் போட்டி போட்டுக்கொண்டு படித்துப் பாராட்டி ஆதரிக்க வேண்டிய அருமையான பத்திரிகை. இந்தப் பத்திரிகையை உங்களுக்கு உரித்தான ஒரே பத்திரிகையாகக் கருதுவதால் இதுபற்றி உங்கள் யோசனைகளை நீங்கள் தாராளமாக எழுதியனுப்பலாம். உங்கள் பெற்றோர்கள் நீங்கள் எதைக் கற்கவும் அறியவும் வேண்டுமென்று விரும்புகிறார்களோ அவற்றைக் கேட்டு எழுதலாம். உங்கள் மதிப்புக்குரிய ஆசிரியர்களுடைய சிறப்பான விருப்பங்களைத் தெரிந்துகொண்டு எழுதலாம். இவற்றை மொத்தமாகத் தொகுத்து, அந்த யோசனைகளையெல்லாம் அமலாக்குவதற்கு அப்பொழுது ஒரு நல்ல வாய்ப்பு ஏற்படும். 5 முதல் பத்து வயதினருக்கான சில பகுதிகளும் பத்து முதல் பதினாறு பதினேழு வயதுவரை ஆனவர்களுக்கான சில பகுதிகளுமாகப் பிரித்து அவர்கள் யோசனை கூறலாம்.

குழந்தைகளுக்கு நல்ல பத்திரிகைகள் அதிகம் இல்லையே என்று பலர் குறைப்படுவதோடு நிற்கிறார்கள். அந்தக் குறையை நீக்க நீங்களே அவர்களைத் தூண்டி அவர்கள் யோசனையைக் கேளுங்கள். உங்கள் விருப்பத்தையும் கூறுங்கள். இரண்டையும் சேர்த்து எனக்கு எழுதியனுப்புங்கள்.

—ஆசிரியர்.




## புல் தடுக்கி வஸ்தாத்

பிச்சுப் பயில்வான் பஸ்கி எடுத்துக்
கச்சித மாக உடல் வளர்த்தானே!
நச்சுப் பாம்பை நசுக்கிய தாக
பச்சைப் பொய்யைச் சொல்லும் அவனும்
செத்த பாம்பைக் கூடக் கண்ணால்
சரியாய்ப் பார்க்கப் பயப்படு வானே!
மூச்சைப் பிடித்து மூன்று நாள்வரை
மூழ்கியே நீரில் இருந்திடு வானும்
மூக்கை மட்டும் மூன்றே நிமிடம்
மூடிப் பிடிக்க விடமாட் டானும்.
பல்லைக் கடித்துப் பக்கம் ஓடப்
புல்லும் தடுக்க விழுவான் கீழே!

—ஜியாவுடீன், மதுரை.

## மூட்டையாரே!

மூட்டையாரே எங்கள் வீட்டில் வசிப்பதேனுங்க?
தூக்கத்திலே தொந்தரவைக் கொடுப்பதேனுங்க?
இரவில்தூக்க மின்றிநீங்க இருப்பதேனுங்க?
இரக்கமின்றி எங்களைநீர் கடிப்பதேனுங்க?
பாடுபட்டு வாழ்ந்(து) உமக்குப் பழக்கமில்லையா?
கேடுகெட்டுத் திரிந்துவாழ வெட்கமில்லையா?

—சு. முருகேசன், தேனி.

## யார் முதலில்?

ஒரு சுவாரஸ்யமான, வேடிக்கையான, ஆனால் விழிக்க வைக்கிற கணக்கு: மணி, குப்பு, ராமு மூவரும் ஒரு படகில் ஏறி, சமுத்திரத்தில் சுமார் ஒரு மைல் தூரம் போயிருப்பார்கள். அப்போது கரையிலிருந்த ஒருவர் துப்பாக்கியை எடுத்து அவர்களை நோக்கிச் சுட்டார். ஏன், எதற்காகச் சுட்டார் என்பது நமக்குக் கேள்வியல்ல. மணி துப்பாக்கி சுட்ட சத்தத்தைமட்டும் கேட்டான். குப்பு புகையைத்தான் பார்த்தான். ராமு துப்பாக்கி ரவை வந்து தண்ணீரில் படகுக்கு அருகில்

விழுந்ததை மட்டுமே கண்டான். அப்படியானால் துப்பாக்கியால் சுடப்பட்டதை அவர்களில் முதலில் அறிந்தவன் யார்? இதுதான் கேள்வி. சொல்லுங்கள் பார்ப்போம். —வி. சரஸ்வதி, சென்னை-4.

(விடை கீழே தரப்பட்டுள்ளது. ஆ-ர்.)

## ஒரு சந்தேகம்

ஒரு நண்பர் ஒரு கவிதை எழுதி அதை இரண்டு பத்திரிகைகளுக்கு அனுப்பிவிட்டார். அந்தக் கவிதை இரண்டு பத்திரிகைகளிலும் பிரசுரமாகிவிட்டது. இதைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

—வி. வி. விஜயசிங், கோவில்பட்டி.

(அந்த நண்பர் அப்படி ஒரே கவிதையைத் தெரிந்து இரண்டு பத்திரிகைகளுக்கு அனுப்பியது தவறு. ஏதாவது ஒரு பத்திரிகைக்குத்தான் அவர் முதலில் அனுப்பவேண்டும். 'கண்ணன்' பத்திரிகையில் இது போன்ற தவறு நேர்ந்தது எனில் அனுப்பும் சம்மானத்தை நிறுத்தி விடுவோம். ஆ—ர்.)

## பொன் மொழி

நான் பல அறிஞர்களின் பொன் மொழிகளையும் அநுபவங்களையும் சேர்த்துக்கொண்டு வருகிறேன். அவை யாவும் ஒவ்வொருவரின் வாழ்விலும் ஏதாவது ஒரு முறையில் பயன்படும் என நம்புகிறேன். ஆதலால் கண்ணனில் பல பெரியோர்களின் அநுபவங்களையும் உபதேசங்களையும் தொகுத்து வெளியிடப் பணிவுடன் வேண்டுகிறேன்.

—ரா. மைதிலி, சென்னை - 1.

## கண்ணன் கழகம்

### அங்கத்தினர் பதிவு கூபன்

(கட்டணம் இல்லை)

பெயர் ......................

விலாசம்......................

......................

பிறந்த தேதி......................

(தேதி, மாதம், வருஷம்)

கூபன் நெ. ஜூன், 1-'57

## ஒரு சிறு பிழை

பரிசுத் தொடர்கதையில் ஒரு சிறு பிழை. என்னவென்றால் மர்ம வார்த்தையில் 14 - 50ஐ முதல் தடவை பிரித்ததில் 1-4-50 வந்தது. இரண்டாகப் பிரித்ததில் நேரம் 14 - 50 என்று இருக்க வேண்டும். 14 - 50 என்று வைத்தால் மாலை 2 மணி - 50 நிமிஷம் ஆகும்.


—என். சுப்பிரமணி,
சென்னை - 1.


## யார் முதலில்: விடை

துப்பாக்கிப் புகையைக் கண்ட குப்புதான் முதலில் அறிந்திருக்க வேண்டும். தண்ணீரில் துப்பாக்கி ரவை வந்து விழுந்ததைக் கண்ட ராமு இரண்டாவதாக அறிந்திருப்பான். கடைசிதான் மணி.

# கதை: ஆர்வி கடற் புலி சித்திரம்: ஸாமி

இந்தக் கதை புயலும் மழையும் சீறி நிற்கும் நடுக் கடலில் ஆரம்பமாகிறது. ஈழ நாட்டுக்கு விஜயம் செய்திருந்த காஞ்சி மன்னன் பல்லவவர்மனும் அவன் செல்வக் குமாரியும் ஏறியிருந்த மரக்கலம் சொந்த நாட்டுக்கு வரும் வழியில், நடுக்கடலில் கால நிலை காரணமாக நின்று விடுகிறது. துணைக் கலங்களும் சூழ நிற்கின்றன. பொன்னும் மணியும் முத்தும் பவழமும் விலை மதிப்பற்ற விந்தைப் பொருள்கள் பலவும் நிறைந்த அவர்களுடைய கலத்தைக் கடற் கொள்ளைக்காரர்கள் தாக்கக் கூடும் என்ற பயமும் பீதியும் அந்தப் பிரயாணிகள், காவலாளிகள் முகத்திலே தெரிகின்றன.




அலை கடலிலே தத்தளிக்கும் மரக்கலத்தில் அனைவரும் ஆண்டவனைத் தொழுது திக்கற்று நிற்கிறார்கள்.
பூம்! பூம்
தூரத்தில் தென்பட்ட ஒரு மரக்கலத்தையும் அதன் கொடியையும் அநுபவசாலியான அவன் கண்டு எச்சரிக்கிறான்.
கப்பல் கொள்ளைக் காரன்!!
கொள்ளைக் காரன் கப்பலாம்!
ஓடு-தலைவருகிட்ட சொல்!

(தொடரும்)



# துப்பறியும் மோகன்

தே. பார்த்தசாரதி

## 5. இருபெரும் திருட்டுக்கள்

திவான் பகதூர் தினகரத்னத்திற்கு நகர வாசிகள் அனைவரும் 'கருமிரத்ன' என்ற பட்டம் வைத்திருந்தனர். அவரை விடப் பரம லோபி ஒருவரைச் சென்னை நகரம் முழுவதும் தேடினாலும் அகப்பட மாட்டார் என்பது மக்களின் மனத்தில் இருந்த அபிப்பிராயம். இந்தச் சொந்த அபிப்பிராயத்தைத் தினகரத்னத்துக்கு முன்னால் யாரும் துணிந்து வெளியிட்டதில்லை.

அவர் 'ஸேபில்' சேர்த்து வைத்திருந்த பணத்தைத் தினமும் காலையிலும் மாலையிலும் எண்ணுவார். பிறகு, அந்த ரூபாய் நோட்டைக் கண்ணில் ஒற்றிக்கொண்டு திருப்பி வைப்பார். அந்த நோட்டுகளுக்கு மட்டும் வாய் இருந்தால், அவையெல்லாம் ஒன்று சேர்ந்து முகாரி ராகத்தில் திவான் பகதூரின் 'பெருந்தன்மை'யைப் பற்றி ஒரு குரல் பாடியே யிருக்கும். அவர் யாருக்காக இப்படிப் பணத்தைச் சேர்த்து வைத்தார் என்பது யாருக்குமே புரியாத புதிராக இருந்தது: ஏன், அது அவருக்கே கூடத் தெரியாது.

அன்று காலை சுமார் 11 மணி இருக்கும். வெயில் பொசுக்கிக்கொண்டிருந்தது. சூரியன் தன் சக்தியையெல்லாம் திரட்டிப் பிரகாசித்துக்கொண்டிருந்தான். அந்த நேரத்தில் தினகரத்தினம் தம் அறையில் சாய்வு நாற்காலியில் சாய்ந்தபடி ஏதோ யோசனையிலாழ்ந்திருந்தார். அந்த அறையின் ஓர் மூலையில்தான் அவருடைய 'உயிர்' இருந்தது. (அதாவது 'ஸேப்' இருந்தது) அந்த உயிரைத் திறக்கவேண்டிய சாவி, தினகரத்தினத்தின் இடுப்பிலேயே இருந்தது. அந்தச் சாவி எப்போதும் அங்கேதான் இருக்கும்.

அந்த சமயத்தில், ''சார்'' என்று ஒரு குரல் கேட்டது. தினகரத்தினத்துக்குத் தூக்கிவாரிப் போட்டது. அவர் கழுத்தைத் திருப்பிப் பார்த்தபோது, அறை வாயிற்படியில் தடபுடலாக ஆடை அணிந்திருந்த ஓர் இளைஞன் நின்றுகொண்டிருந்தான். பாண்ட்டும் பூட்ஸும் கோட்டும் அணிந்திருந்த அந்த இளைஞனின் கண்களில் கறுப்புக் கண்ணாடி ஒளி வீசிற்று.

தினகரத்தினம் உடனே எழுந்து அந்த ஆசாமியை வரவேற்றார். 'வாருங்கள், நீங்கள் யார் என்று தெரியவில்லையே?'' என்று கேட்டபடி எழுந்தார். அந்த ஆசாமி தன் தலையில் அணிந்திருந்த 'ஹாட்'டை மரியாதைக்காக எடுத்துக் கையில் வைத்துக்கொண்டு, ''நான் யார் என்று உங்களுக்குத் தெரிந்திருக்க நியாயம் இல்லை'' என்று சிரித்தபடி சொல்லிவிட்டு அவருக்கு எதிரில்

இருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான். 'பாண்ட்' பையிலிருந்து ஒரு கைக்குட்டையை எடுத்து நெற்றியில் வழிந்த வியர்வையை நாசுக்காகத் துடைத்து விட்டுக்கொண்டான்.

உடனே திவான்பகதூர், ''டேய், முனியா! இங்கே வா'' என்று அழைத்தார். அடுத்த கணம் ஒரு வேலைக்காரன் ஓடோடி வந்து கைகளைக் கட்டிக்கொண்டு, ''என்னுங்க?'' என்றான். "சார் ரொம்பவும் களைப்பாக இருக்கிறார். நீ சட்டுனு ஓடிப்போய் புதுசா வாங்கியிருக்கும் பானையிலிருந்து குளிர்ந்த ஜலம் கொண்டுவந்து கொடு'' என்று தினகரத்தினம் உத்தரவிட்டார்.

''சரிங்க'' என்று சொல்லிவிட்டுப் பணியாள் அகன்றான். கொஞ்ச நேரத்தில் ஒரு கிளாஸ் டம்ளரில் குளிர்ந்த தண்ணீர் கொண்டுவந்து வைத்தான்.

அந்தத் தண்ணீரைப் பருகிவிட்டு அந்த இளைஞன் திவான் பகதூரிடம், ''தங்கள் நண்பர் சுந்தரம் என்னை அனுப்பினார். அவர் சொல்லச் சொன்னதைத் தங்களிடம் சொல்ல வேண்டும். அதற்கு நாம் இருவரும் தனியாக இருப்பது நல்லது'' என்றான்.

தினகரத்தினம், ''அதற்கென்ன, அப்படியே ஆகட்டும்!'' என்று சொல்லிவிட்டு முனியனை நோக்கி, நீ கதவை நன்றாகச் சாத்திக்கொண்டு வெளியே போ. நான் கூப்பிடும்போது வரலாம்'' என்றார். முனியனும் கதவைச் சாத்திக்கொண்டு சென்றான்.

புதிய ஆசாமி ஒரு சிகரெட்டை எடுத்து வாயில் வைத்துக்கொண்டான். பிறகு ஒரு நெருப்புக் குச்சியைக் கொளுத்திச் சிகரெட்டைப் பற்ற வைத்தான். 'குப்'பென்று புகை கிளம்பியது.

''தங்கள் பெயர் என்னவென்று அறிந்துகொள்ளலாமா?'' என்று விநயமாகக் கேட்டார் தினகரத்தினம்.

''ஆ ஹா, தாராளமாக! என் பெயர் சபாபதி'' என்று சொல்லிவிட்டு, சிகரெட்டை உறிஞ்சிப் புகையை வெளியிட்டான்.

தினகரத்தி



ணம் 'லொக்'கென்று இருமினார். அந்தச் சிகரெட்டுப் புகை அவரை என்னமோ செய்தது. அதை அடக்கிக்கொண்டு, ''நீங்கள் வந்த விஷயம்?'' என்று வினவினார். அவர் கை இடுப்பில் இருந்த சாவியை ஒரு முறை தடவிப் பார்த்தது.

சபாபதி, ''அது தான் சொன்னேனே. சுந்தரம் தான் என்னை அனுப்பினார்'' என்று சொல்லி விட்டு அறையைச் சுற்றிலும் ஓர் அவசர நோட்டம் விட்டான். அவன் கண்கள் தினகரத்தினத்தின் இடுப்பில் இருந்த சாவியை நோக்கின.

சுந்தரம் என்பவர் தினகரத்தினத்தின் நெருங்கிய நண்பர். இருவரும் சில நாட்களாக ஏதோ ஒரு வீடு வாங்கும் வியாபாரத்தில் முனைந்திருந்தனர். ஆகவே தினகரத்தினம் அவசரமாக, ''ஓ, வீடு விஷயமாக



அவர் உங்களிடம் ஏதாவது சொன்ஞரா?'' என்ருர்.

சபாபதி அசுவாரஸ்யமாகத் தலையை ஆட்டி, ''ஆமாம்; சொன்ஞர், சொன்ஞர்'' என்ருன். சிகரெட்டிலிருந்து எழுந்த புகை தினகரத்தினத்தை மீண்டும் திணற அடித்தது. தலையை லேசாகச் சுற்றியது.

''என்ன சொன்ஞர்? அந்த வீட்டுக்காரர் பத்தாயித்துக்குக் குறைவாகத் தரமாட்டாராம்!'' என்ருர் தினகரத்தினம்.

''ஆமாம், அப்படித்தான் சொன்ஞர்''-சபாபதி.

''நான் அந்த வீட்டை ஒன்பதாயிரத்துக்குக் கேட்டேன். ஒரு ஆயிரம் ரூபாய் குறைத்துக் கொடுத்தால் என்ன கெட்டு விடும்?'' என்ருர் தினகரத்தினம். இதைச் சொல்லும்போதே அவர் கண்கள் மயங்கின. இருமல் வந்தது, கை கால்கள் துடித்தன. அதற்குமேல் அவரால் பேசமுடியவில்லை. அவர் கண்கள் சில நிமிஷம் சபாபதியை உற்று நோக்கின. அப்புறம் தாமாக மூடிக் கொண்டன. இதையே எதிர்பார்த்திருந்தவன்போல் காத்திருந்த சபாபதி, மெள்ள எழுந்து சாத்தியிருந்த அறைக் கதவை உட்பக்கம் தாளிட்டான்.

அடுத்து அவன் செய்த வேலைகளைமட்டும் தினகரத்தினம் பார்க்க நேர்ந்திருந்தால் அவர் அங்கேயே மூர்ச்சைபோட்டு விழுந்திருப்பார். ஆனல் நல்ல காலமாக அதைப் பார்ப்பதற்கு முன்னலேயே மூர்ச்சை போட்டுக் கிடந்தார்.

சபாபதி எவ்விதத் தயக்கமும் இன்றி, தினகரத்தினத்தின் இடுப்பில் இருந்த சாவியை எடுத்துச் செய்யவேண்டியதை முறைப்படி செய்து முடித்தான்.

* * *

திவான்பகதூர் தினகரத்தினத்தின் வீட்டு வேலையாள் முனியனுக்குப் பொழுது போகாவிட்டால் இரண்டு வேலைகள் உண்டு. 1. தலையைச் சொறிவது. 2. பீடி பிடிப்பது. அன்றைத்தினம் இரண்டாவதாகச் சொன்ன வேலையை அவன் செய்துகொண்டிருந்த போது, அவனுக்கு ஓர் எண்ணம் தோன்றியது. 'எசமானைப் பார்க்க இன்றைக்குப் புதிதாக ஒரு ஆசாமி வந்தானே! அவன் வந்து சுமார் அரைமணி நேரம் போலாகிறது. அவனும் எசமானும் அப்படி என்னதான் விழுந்து விழுந்து பேசுவார்களோ! ஆனல், அந்த ஆசாமி நம்ம எசமானுக்கு ரொம்ப வேண்டியவன் போல் காண்கிருன்! இல்லாவிட்டால் அவர் ஏன் நம்மை வெளியே போகச் சொல்கிருர்? ஆனல் அந்த மனிதன் இதற்கு முன்னல் நம் வீட்டுக்கு வந்து நாம் பார்த்ததில்லையே! ஒரு வேளை அவன் ஏதாவது விரோதியாக இருந்தால்..? சே, அப்படி இருக்காது. அப்படிக் கொள்ளையடிக்க வந்திருந்தால் அவன் ஏமாந்துதான் திரும்ப வேண்டும். எசமான் அப்படி என்ன லேசாகத் தம் இடுப்பிலிருந்து சாவியைத் தூக்கிக் கொடுத்துவிடுவாரா? அதற்கு வேறு ஆளைத்தான் பார்க்கவேண்டும்! எதற்கும் எசமான் உத்தரவை மீறி அறைக்குள் போய்ப் பார்க்கலாமா?' என்று அந்த விசுவாசமுள்ள வேலைக்காரன் வாசலில் உட்கார்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தபோது, அந்தக் கறுப்புக் கண்ணுடி அணிந்த இளைஞனே வெளியே வந்துவிட்டான்.

அவனைப் பார்த்ததும் முனியன் எழுந்து நின்ருன். சபாபதி முனியனைப் பார்த்ததும் வெகுநாள் பழக்கப் பட்டவனைப்போல, ''முனியா, ஐயாவுக்குத் தூக்கம் வருதுன்ஞரு. அதான் நான் கூட அதிக நேரம் பேசாமல் உடனேயே வந்துட்டேன். ஐயாவும் கதவைச் சாத்திக்கிட்டு படுத்துட்டாரு. நீ போய் இப்போது அவரைத் தொந்தரவு செய்யாதே. அவர் சொஸ்தமாகத் தூங்குகிருர்'' என்ருன். அவனுடைய வலது கை அவன் கோட்டுப் பாக்கட்டை அழுத்திப் பிடித்துக் கொண்டிருந்தது.

''சரிங்க; இப்போ நான் அந்த அறைக்குள்ளாற போவமாட்டே

னுங்க' என்று தலையை ஆட்டினான் முனியன்.

சபாபதி 'விருட்'டென்று வெளியேறி வெயிலில் மறைந்தான்.

* * *

சுந்தரம் என்ற அந்தப் பணக்காரர் தம் எதிரில் நின்ற இளைஞனை ஏற இறங்கப் பார்த்தார். அவன் அணிந்திருந்த சிறுப்புக் கண்ணாடியும் கோட்டும் பாண்டும் டையும் சுந்தரத்துக்கு அந்த இளைஞன்பால் ஒரு மதிப்பை ஏற்படுத்தின.

''தங்கள் நண்பர் தினகரத்தினம் என்னிடம் ஒரு முக்கிய செய்தி சொல்லி அதைத் தங்களிடம் சொல்லும்படி என்னை அனுப்பினார். அதைத் தங்களிடம் தனியாகத்தான் சொல்லவேண்டும் என்றார். ஆகவே..'' என்று அடக்கத்துடன் கூறி நின்றான் அந்த ஆசாமி.

''அப்படியே செய்வோம்'' என்று சொல்லிவிட்டு மற்றவர்களை வெளியே போகச் சொல்லிவிட்டு, அறைக் கதவைச் சாத்தித் தாளிட்டார் சுந்தரம். பிறகு, ''தங்கள் பெயர் என்ன?'' என்று கேட்டார்.

இந்த ஆசாமி நமக்கு ஏற்கனவே தினகரத்தினத்தின் வீட்டில் அறிமுகமானவன். அவன் சபாபதி என்று திவான்பகதூரிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டதும் நினைவிருக்கும். ஆனால், சுந்தரத்திடம் தன் பெயர் சபாபதி என்று சொல்லாமல், ''என் பெயர் முத்து'' என்று சொன்னான்.

''ஆல் ரைட், மிஸ்டர் முத்து! தினகரத்தினம் என்ன சொன்னார்?'' என்று கேட்டார் சுந்தரம்.

''வீடு விஷயமாகத்தான் சொன்னார்.''

''ஓ, வீடு விஷயமாகவா? என்ன சொன்னார்?'' என்று ஆவலுடன் கேட்டார் சுந்தரம்.

முத்து தன் 'பாண்ட்' பாக்கெட்டிலிருந்து ஒரு கைக்குட்டையை எடுத்துத் தாம் விசிறிக் கொள்வதுபோல் வேகமாக சுந்தரத்தின் முகத்திற்கு அருகில் கொண்டுபோய் ஆட்டினான். அதைத் தொடர்ந்து 'குப்'பென்ற ஓர் நெடி அறையில் பரவியதை சுந்தரம் பேச்சுச் சுவாரஸ்யத்தில் உணரவில்லை.

''அடாடா, என்ன வெயில் போங்க!'' என்று அலுப்புடன் கூறிய முத்து, ''அந்த வீட்டைப் பற்றி என்ன சொன்னார் என்றால், அவர் அந்த வீட்டுக்குப் பத்தாயிரம் ரூபாய் கொடுக்கத் தயாராம். எப்படியாவது அந்த வீடு அவருக்குக் கிடைத்தால் போதுமாம்'' என்று சரடு விட்டான்.

''ஓ, அப்படிச் சொன்னாரா? அப்படியென்றால் இந்த விஷயத்தை நான் வீட்டுக்காரனுக்கு 'போன்' மூலம் இப்போதே சொல்லி விடுகிறேன்!'' என்று எழுந்தார் சுந்தரம்.

முத்து, ''சே, சே. அதெல்லாம் வேண்டாம் சார். இப்படி உட்காருங்க. நான் சொல்வது முழுவதையும் கேளுங்க'' என்று சொல்லி அவரை நாற்காலியில் உட்கார்த்தி வைத்தான். இதைச் செய்யும்போதே அவன் கண்கள் சுவரில் ஒரு படத்தின் பின்னால் மறைவாக மாட்டப்பட்டிருந்த சாவியைக் கவனித்துவிட்டன.

''ஏன் போன் பண்ண வேண்டாம் என்கிறீர்கள்?'' என்று கேட்ட சுந்தரம் தம் தலை லேசாகச் சுற்றுவதை உணர்ந்து ஒரு கையால் தலையை அழுத்திப் பிடித்துக்கொண்டார்.

''அதுவா? காரணம் என்னவென்றால், தினகரத்தினம் இன்று மாலை தங்களுடன் கலந்து இது விஷயமாகப் பேச இங்கே வருகிறேன் என்று கூறினார். பிறகு மற்றதெல்லாம் செய்யலாம் என்றார்'' என்றான் முத்து.

'சடா'ரென்று சுந்தரத்தின் தலை சாய்ந்தது. முத்து எழுந்தான். படத்தின் பின்னால் மாட்டப்பட்டிருந்த சாவியை எடுத்தான். அதே அறையின் ஒரு மூலையில் இருந்த இரும்பு பீரோவின் கெட்டியான பூட்டில் சாவியை மாட்டித் திறந்தான். உள்ளே கற்றை கற்றையாக நோட்டுக்கள் இருந்தன.

சுந்தரத்தின் மகன் சாம்பு கீழே கூடத்தில் ஒரு கதைப் புத்

தகத்தைப் படித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தவன் தம் அருகில் ஏதோ காலடிச் சத்தம் கேட்பதை உணர்ந்து திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தான். அவனருகில் முத்து புன்னகை புரிந்தபடி நின்று கொண்டிருந்தான்.

''நீங்கள்தானே சுந்தரத்தின் மகன்? சுந்தரம் தங்களைக் கொஞ்சம் குளிர்ந்த நீர் எடுத்துக் கொண்டு மாடிக்கு வரச் சொன்னார்'' என்று அவன் சொன்னதும் சாம்பு புத்தகத்தை அப்படியே போட்டுவிட்டு உள்பக்கம் சென்றான். அவன் தலை மறைந்ததும், முத்து அங்கே மேஜைமீது கிடந்த ஒரு சிறிய கைக்கடியாரத்தை எடுத்துக் கோட்டுப் பாக்கெட்டில் போட்டுக்கொண்டு திருப்தியுடன் தலையை ஆட்டிவிட்டு வெளியேறினான்.

கூடத்தைக் கடக்கும்போது, தம் 'பாண்'டுப் பையிலிருந்து கைக்குட்டை நழுவிக் கீழே விழுந்ததை அவன் கவனிக்கவில்லை!

குளிர்ந்த நீரை எடுத்துக் கொண்டு மாடியில் தன் தந்தையின் அறைக்குச் சென்ற சாம்பு தந்தை மூர்ச்சையாகிக் கிடப்பதைக் கண்டான். திகைத்துப் போன அவன் உடனே அவரை உலுப்பி உலுப்பி அழைத்தான். ஆனால், சுந்தரம் மூர்ச்சை தெளிந்து எழுந்திருக்கவில்லை. உடனே சாம்பு கீழே ஓடித் தம் அம்மாவை அழைத்து வந்தான். அவன் அம்மாவுக்குப் பயமும் சந்தேகமும் உண்டாயின. டம்ளரில் இருந்த ஜலத்தை அவர் முகத்தின் மீது தெளித்துவிட்டு மேலே இருந்த மின்சார விசிறியைச் சுழலவிட்ட சாம்பு ஏதோ யோசனை தோன்றியவனாய், கூடத்துக்கு ஓடிப்போய்ப் பார்த்தான். கறுப்புக் கண்ணாடி ஆசாமி அங்கே இன்னும் நின்றுகொண்டிருக்கிறானா என்றுதான் பார்த்தான்; ஆனால் அங்கே யாரையும் காணவில்லை. அத்துடன் மேஜைமீதிருந்த கைக் கடிகாரத்தையும் காணவில்லை. வந்தவன் எப்பேர்ப்பட்ட ஆசாமி என்பது அப்போதுதான் அவனுக்கு விளங்கியது.

அவன் திரும்பவும் மாடிக்கு ஏறி வந்தபோது சுந்தரம் நாற்காலியில் நன்றாக நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டிருந்தார். சாம்புவின் அம்மா முகத்தில் மலர்ச்சியுடன் பக்கத்தில் நின்று கொண்டிருந்தாள்.

சுந்தரத்துக்குக் கொஞ்சம் கொஞ்சமாகப் பழைய நினைவுகள் மனக் கண்முன் தோன்றின. உடனே அவர், ''எங்கே மிஸ்டர் முத்துவைக் காணோம்? இங்கே தானே இருந்தார்? அவர் ஏன் அதற்குள் இப்படி மறைந்துவிட்டார்?'' என்று யோசித்தார். பிறகு, டெலிபோன் இருக்கும் அறைக்குச் சென்று தம் நண்பர் தினகரத்தினத்துக்குப் போன் செய்தார்.

* * *

சபாபதி வெளியேறிய சில நிமிஷங்கள் கழித்து முனியனுக்கு ஒரு சந்தேகம் தோன்றிற்று. 'எதற்கும் எசமான் அறைக்குள் சென்று பார்க்கலாம்' என்று எண்ணி, மெள்ள திவான்பகதூர் அறைக் கதவைத் திறந்து எட்டிப் பார்த்த முனியனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. தினகரத்தினம் படுத்துக்கொண்டால் கட்டிலின் மீது மெத்தை போட்டுக்கொண்டு நன்றாகத் தூங்குவதுதான் வழக்கம். அப்படியின்றி, சாய்வு நாற்காலியில் உணர்வின்றி அவர் படுத்திருந்தவிதம் அவனுக்குச் சந்தேகத்தை உண்டாக்கிற்று. அவர் அருகில் சென்று,''எசமான், எசமான்'' என்று இரண்டு தடவை உரக்க அழைத்தான். சாதாரணமாகச் சிறிய சப்தம் கேட்டாலே விழித்தெழுந்துவிடும் தினகரத்தினம் அப்போதும் எழுந்திருக்கவில்லை.

முனியன், மனத்தில் பெரும் போராட்டத்துடன், அருகிலிருந்த டாக்டர் வீட்டுக்கு ஓடி அவரை அழைத்து வந்தான். டாக்டர் வந்து பார்த்துவிட்டு, ''அடடா, இவர் மூர்ச்சையாகவல்லவா கிடக்கிறார்! இது எப்படி நேர்ந்தது?'' என்று திகைப்புடன் கேட்டார். முனியன் அன்று நடந்ததையெல்லாம் சொன்னான். (தொடரும்)



# குழந்தையும்-
# -கோவிலும்

*ரா. வெ. மணிவாசகன்*

## காட்சி-1.

[தெருவில் சிறு குழந்தைகள் வீடு கட்டி விளையாடிக்கொண்டிருக்கின்றனர்.]

நரசிம்மன்: அடே, யார் வீடுடா நன்ருயிருக்கிறது?

ராமு: நான் கட்டின வீடு தானடா நன்ருயிருக்கிறது!

கோபு: இல்லையடா; நரசிம்மன் கட்டின வீடுதான் நன்ருயிருக்கிறது.

ராமு: கிட்டு மட்டும் கோவில் கட்டுகிருனே!

நர: எல்லோரும் வீடு கட்டும் பொழுது ஒருவனுவது கோவில் கட்ட வேண்டாமா?

ராமு: கிட்டுவும் நம்மைப்போல் முதலில் வீட்டைக் கட்டிவிட்டுப் பின்னுல் கோவில் கட்டுவதற்கு என்ன?

நர: அதெல்லாம் அவரவர் விருப்பம். எதையும் கட்டலாம். பேசாமலிரு!

கோபு: வீடு தனி ஒருவனுக்குச் சொந்தம்; ஆதலால் வீட்டைத் தானே கட்டவேண்டும்? கோவில் ஊருக்குப் பொதுவாதலால் கோவிலை எல்லோருமாகச் சேர்ந்தே கட்டவேண்டும்.

நர: அடே, முதலில் கோவில் தானடா கட்டவேண்டும்; அப்புறம்தானடா வீடுகளைக் கட்ட வேண்டும். அந்த வகையில் எல்லோருமாகச் சேர்ந்தே கிட்டுவைப் புகழத்தான் வேண்டும்!

ராமு: நீங்கள் எல்லோரும் கிட்டுவோடு சேர்ந்துகொண்டீர்களடா! என்னுடன் ஒருவரும் சேரமாட்டேன் என்கிறீர்கள்; நாளையிலிருந்து உங்களுடன் நான் விளையாட வரமாட்டேன்! கி...கி... கி...(அழுகிருன்)

கோபு: ராமு அழுகிருனடா; நாளையிலிருந்து விளையாட வர மாட்டானும்!

நர: ஏனடா ராமு, அழுகிருய்?

ராமு: என்னுடன்தான் ஒருவரும் சேரமாட்டேன் என்கிறீர்களே!

நர: அதற்காகவா அழுகிருய்? இனிமேல் உன்னுடன் சேர்ந்து கொள்கிருேம்; அழாதே.

ராமு: யார் கட்டின வீடு நன்ருயிருக்கிறது? சொல், பார்க்கலாம்.

நர: நீ கட்டின வீடுதான் நன்ருயிருக்கிறது என்று வைத்துக் கொள்வோமே!

ராமு: சும்மா வைத்துக்கொண்டால் போதாது; உண்மையைச் சொல்!

நர: நீ கட்டின வீடுதான் நன்ருயிருக்கிறது! நாளைக்கு விளையாட வந்துவிடு.

ராமு: நாளைக்கும் வந்துவிடுகிறேன், நரசிம்மா! (சிரிக்கிருன்)

கோபு: அழுத பிள்ளை சிரிக்குமாம்; கழுதை....!

நர: அடே; சத்தம் போடாதே. அப்புறம் நாளைக்கு விளையாட வர மாட்டான்!

கோபு: கிட்டுவைப் பார்; அவன் தான் ஒருவரிடமும் பேசாமல் கோவில் கட்டிக்கொண்டிருக்கிருன்! (குதிரையின் குளம்பொலி கேட்கிறது.)

நர: அதோ ஒரு குதிரை வருகிறதடா; வாருங்கள் அதைப் பார்க்கப் போவோம். (எல்லாச்

சிறுவர்களும் 'குதிரை! குதிரை!' என்று ஓடுகிறார்கள்.)

[குதிரைவீரன் எல்லாச் சிறுவர்களையும் மெதுவாகக் கவனித்துக்கொண்டே குதிரையில் செல்லுகிறான்]

ராமு: குதிரை போய்விட்டது; நாமெல்லாம் விளையாடப் போவோம், வாருங்களடா.

[சிறுவர்களெல்லாரும் வீடுகட்டி விளையாடும் இடத்திற்கு வருகிறார்கள்]

கோபு: கிட்டு மட்டும்தானடா குதிரையைப் பார்க்க வரவில்லை! அவன்தான் காரியத்தில் கண்ணாயிருக்கிறான்!

நர: நீ கிட்டுவைப் புகழ்ந்தால் ராமு அழவாரம்பித்து விடுவான்!

கோபு: உண்மையைத்தானே சொல்கிறேன்?

நர: அந்த உண்மையைத்தானேடா சொல்லாதே என்கிறேன்!

கோபு: இனிமேல் பேசவில்லை.

நர: அதற்குள் நீ கோபித்துக் கொள்ளாதே!

கோபு: கோபமில்லை. நாமெல்லோரும் ஓடிப்போய்க் குதிரையைப் பார்க்கக் கூடி நின்றோமே; அந்தக் குதிரைக்காரன் 'சின்னக் குழந்தைகள் குதிரையைப் பார்க்க வந்திருக்கிறார்களே' என்று கொஞ்ச நேரமாவது குதிரையை நிறுத்தி வைத்தானா பார்த்தாயா? நாம் கால் வலிக்க ஓடி வந்ததுதான் மிச்சம்!

நர: அவனுக்கு என்ன அவசர வேலையோ, யார் கண்டது?

கோபு: 'குழந்தைகள்தானே, குதிரையைப் பார்த்து விட்டுப் போகட்டும்' என்ற எண்ணம் அவனுக்கு இல்லையே!

நர: நாம் ஒன்றுகூடிக் கூச்சலிடுவது அவனுக்குப் பிடிக்காதிருக்கலாம்!

ராமு: நாம் கூச்சலிட்டுக் கொண்டு குதிரைக் காலுக்குள் சிக்கி விட்டால் அது பெரிய ஆபத்தல்லவா!

நர: நேரம் இருட்டி விட்டது; இனிமேல் எல்லோரும் வீட்டுக்குப் போவோம். நாளைக்கு எல்லோரும் விளையாட வந்துவிட வேண்டும்; தெரிந்ததா? (புறப்படுகிறார்கள்)

கோபு: கிட்டு வரவில்லையே!

நர: அடே கிட்டு! வா. வீட்டிற்குப் போவோம். நாளைக்குப் பாக்கிக் கோவிலைக் கட்டு!

கிட்டு: நீங்கள் போங்கள். நான் கொஞ்ச நேரம் பொறுத்து வருகிறேன்!

நர: அடே வாடா கிட்டு, நீ இப்பொழுது வராவிட்டால் உன் அம்மா எங்களுடன் சண்டை பிடிக்க ஆரம்பித்து விடுவாள்!

கிட்டு: நீங்கள் சும்மா போங்கள். ஒருவரும் சண்டைக்கு வர மாட்டார்கள்.

[கிட்டுவைத் தவிர எல்லாச் சிறுவர்களும் வீட்டிற்குப் போகிறார்கள்.]

## காட்சி - 2.

[கிட்டு வீட்டிற்குப் போகாமல் கோவில் கட்டிக்கொண்டிருக்கிறான். குதிரை வீரன் அவ்வழியாகத் திரும்பி வருகிறான்.]

குதிரை வீரன்: குழந்தாய், நீ என்ன செய்கிறாய்?

கிட்டு: புத்த பகவானுக்குக் கோவில் கட்டுகிறேன்!

வீரன்: (சிரித்துக் கொண்டே) பெருமை மிக்க புத்த பகவானுக்கு நீ கட்டும் இந்தச் சின்ன கோவில் போதுமா?

கிட்டு: நான் என்ன கனிஷ்க சக்கரவர்த்தியா, பெரிய கோவில் கட்டுவதற்கு? எல்லோரும் அவரவர் சக்திக்குத் தகுந்தபடிதானே சேவை செய்ய முடியும்?

வீரன்: குழந்தாய்! கனிஷ்க சக்கரவர்த்தி கோவில் கட்டுவதானால் அது எவ்வளவு பெரியதாக இருக்க வேண்டுமென்று நீ எண்ணுகிறாய்?

கிட்டு: நானூறு அடி உயரமுள்ள கோபுரம் கட்ட வேண்டும்! சுத்தத் தங்கத்தாலான புத்த பகவான் விக்கிரகம் ஒன்றை அங்கே பிரதிஷ்டை செய்யவேண்டும்! தினம் ஆயிரக்கணக்கான ஏழைகள் உணவு அருந்தச் சாப்பாட்டு விடுதிகளை அமைக்க வேண்டும்! கோவில் திருப்பணியாளர்களும் பக்த கோடிகளும் தங்குவதற்குப் பல சத்திரங்களையும் கோவிலைச்


சுற்றி அமைக்க வேண்டும். பெரிய மண்டபங்களைக் கட்டி அதில் தினந் தோறும் அறிஞர்களைக் கொண்டு புத்த பகவானின் திரு அவதார மகிமையைப் பற்றிப் பிரசங்கம் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். மருத்துவ விடுதிகளையும் நூல் நிலையங்களையும் கல்விச்சாலையையும் அங்கு கட்டுவித்தல் வேண்டும். வேளை தவறாது புத்த பகவானுக்குப் பூஜையும் விசேஷ காலங்களில் திருவிழாவும் நடத்தி, பகவான் புத்தரே அங்கு எழுந்தருளும்படிச் செய்ய வேண்டும்!

வீரன்: குழந்தாய்: உன்னுடைய பக்தியைப் போற்றுகிறேன்!

கிட்டு: நாம் இவைகளைப்பற்றிப் பேசிப் பயன் என்ன! கனிஷ்க சக்கரவர்த்தி கோவில் கட்டப் போகிறாரா? என்னைப் போன்ற ஏழைகள் எங்கள் தகுதிக்குத் தகுந்தாற்போல் கோவில் கட்டினால்தான் உண்டு!

வீரன்: குழந்தாய்; கவலைப் படாதே! கனிஷ்க சக்கரவர்த்தி கோவில் கட்டுவார்! உன பக்தியைக் கண்டு நான் களிப்படைகிறேன்! உன்னைப் புத்த பகவான்





சங்கீத வாத்தியார்: என்னடா இது, வந்ததும் வராததுமா மங்களம் பாடக் கத்துக் கொடுக்கச் சொல்றே!

**சிஷ்யன்:** இப்போ எல்லோரும் முதல்லே அதைத் தானே பாடச் சொல்றுங்க!

! ! ! ! ! ?

---

காப்பாற்றுவாராக! (குதிரை வீரன் போகிறுன்)

(குதிரைக் குளம்புகளின் சப்தம் செல்லச் செல்லத் தேய்ந்து கொண்டே போய் மறைகிறது)

### காட்சி-3.

இடம்: கனிஷ்க சக்கரவர்த்தியின் தர்பார் மண்டபம்

[பௌத்த சந்நியாசிகளுடன் கனிஷ்கர் ஆலோசனை செய்து செய்துகொண் டிருக்கிறுர்]

கனிஷ்கர்: பௌத்தமத ஞானிகாள்! பாரத தேசத்தை ஆண்ட மன்னர்களில் பலர் பெரிய கோவில்களைக் கட்டியிருக்கிறுர்கள். நமது ஆட்சியிலும் அப்படி ஒரு பெரிய கோவில் கட்ட வேண்டுமென்று எண்ணுகிறேன். உங்கள் விருப்பம் என்ன?

நாகார்ஜுனர்: மதி நிறைந்த மன்னு; இம்மாநிலத்தில் தாங்கள் கட்டும் கோவில் உலகப் பிரசித்தி பெற்று விளங்க வேண்டும்!

அச்வகோஷர்: மானிலம் புகழும் மன்னு! தங்கள் விருப்பம் வெற்றி பெற, புத்த பகவான் அருள் புரிவாராக!

கனி: நமது தேசத்தில் எந்த இடத்தில் கோவில் கட்டலாம்?

விசுவாமித்திரர்: நமது ராஜ்யத்தின் தலைநகரமான புருஷபுரத்தில் தான் கட்டவேண்டும்!

கனி: மந்திரிகளே! பௌத்த சங்கத்தார்கள், சிற்ப வல்லுநர்கள், கட்டடக் கலைஞர்கள் இவர்களுடன் நன்கு யோசனை செய்து கோவில் கட்டுவதற்குத் திட்டம் தயாரியுங்கள்! உடனே கோவில் உருவாகட்டும்.

மந்திரிகள்: உத்தரவு, மகாராஜா.

[சபை கலைகிறது. எல்லோரும் தர்பார் மண்டபத்தைவிட்டு வெளியேறுகிறுர்கள். கனிஷ்க சக்கரவர்த்தி தனிமையிலிருந்து சிந்தித்துக்கொண் டிருக்கிறுர்.]

### காட்சி-4.

[தெருவில் பல குழந்தைகள் விளையாடிக்கொண் டிருக்கின்றனர்.]

நர: அடே ராமு! இன்றைக்கு என்ன விளையாடலாம்?

ராமு: சடுகுடு விளையாடுவோமடா.

கோபு: வேண்டாமடா; வீடு கட்டியே விளையாடலாம்.

ராமு: வீடு கட்டி விளையாடினுல் எல்லோரும் ஒன்றுபோல் வீடு கட்ட வேண்டும்; கிட்டு மட்டும் கோவில் கட்டுகிறுனே!

நர: அடே, வீடு, கோவில் எல்லாம் கட்டடம்தானே? கட்டடம் கட்டி விளையாடுகிறேும் என்று வைத்துக்கொள்வோமே!

கோபு: கட்டடம் கட்டி விளையாடுவோமா?

நர: சரி; அடே! நான் நேற்று கட்டின வீடு அப்படியே இருக்கிறதடா!

ராமு: என் வீட்டை மட்டும் அந்தக் குதிரை மிதித்து அழித்து விட்டதடா! கி..கி..(அழுகிறுன்)

கோபு: அடே ராமு, அழாதேடா! நானும் நீயும் சேர்ந்து புதிய வீடு கட்டுவோம். குதிரை மிதிக்கவில்லை; பக்கத்திலே வேகமாய்

ஓடியதில் வீடு இடிந்து விழுந்திருக்கிறது. (புதிய வீடு கட்டுகிருர்கள்)

நர: ஏன் அழுகிருய்?

கோபு: அவன் வீடு உடைந்து விட்டதாம்!

நர: எல்லாருடைய வீடும் அப்படியே இருக்கும்பொழுது ராமுவின் வீடு மட்டும் ஏனடா உடைந்தது?

கோபு: நல்லவர்கள் வீடு நன்ருயிருக்கிறது; கெட்டவர்கள் வீடு கெட்டுப்போயிற்று.

ராமு: நீ எனக்கு வீடு கட்டித் தந்ததெல்லாம் போதும்; போ! இனிமேல் நானே கட்டிக் கொள்வேன். நான்தான் கெட்டவனுச்சே; ஏன் சேருகிருய்? போ போ..ஆ! (தள்ளுகிருன்)

நர: அடே, சண்டை போடாதே.

கோபு: சண்டை இல்லே. சும்மா விளையாட்டுக்கு!

ராமு: சண்டைதான்!

நர: நாம் சண்டை போட்டுக் கொண்டிருக்கிருேம்; அதோ பாருங்கள் கிட்டுவை. அவன்தான் கெட்டிக்காரன். ஒருவரிடமும் பேசாமல் ஒன்றையும் கவனிக்காமல் கோவில் கட்டிக்கொண்டிருக்கிருன்!

கோபு: நேற்று ஒரு குதிரைக்காரன் வந்தான் என்று நாமெல்லாம் பார்ப்பதற்கு ஓடினுேமே; குதிரைக்காரன் பேட்டியளிக்காமல் ஓடிவிட்டான்! கிட்டு குதிரையைப் பார்க்கவே வரவில்லே; குதிரைக்காரன் திரும்பி வரும்போது கிட்டுவிடம் வெகு நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டுப் போயிருக்கிருனும்!

ராமு: பார்த்தாயா அநியாயத்தை! அந்தக் குதிரைக்காரன்தான் என் வீட்டை உடைத்திருக்கிருன்! இப்பொழுது அவனேச் சும்மாவிடப் போவதில்லே. (கிளம்புகிருன்)

நர: யாரையடா?

ராமு: கிட்டுவை!

நர: கிட்டுவாடா உடைத்தான்?

ராமு: கிட்டுவால்தானே உடைந்துவிட்டது?

கோபு: கிட்டு அவனிடம் உடைக்கச் சொன்னுனு?

ராமு: நீங்கள் எல்லோரும் கிட்டுவுடன்தான் சேர்ந்துகொள்கிறீர்கள். கி...கி...கி (அழுகிருன்) இனிமேல் நான் உங்களுடன் விளேயாடவே வரமாட்டேன்..! (போகிருன்)

நர: வராவிட்டால் போடா வீட்டுக்கு!

ராமு: இனிமேல் ஒரு நாளும் உங்களுடன் விளேயாட வரமாட்டேன். (அழுதுகொண்டே போகிருன்.)

## காட்சி-5.

இடம்: புருஷபுரத்தில் கனிஷ்க சக்கரவர்த்தி கோவில்.

[ஏழு வருஷங்களுக்குப் பின் கனிஷ்க சக்கரவர்த்தி கோவில் கட்டி முடித்தார்; சிறுவன் கிட்டு பெரியவனுகிவிட்டான். கனிஷ்க சக்கரவர்த்தி கிட்டுவை அழைத்து வர ஆள் அனுப்பினுர். கிட்டுவும் வந்து சேர்ந்தான்!]

கிட்டு: வணக்கம், வேந்தே!

கனி: வணக்கம் வாலிப! உனது பக்தியைக் கேள்விப்பட்டு மகிழ்ச்சியடைகிறேன். புதிதாக நான் கட்டிய இந்தக் கோவில் உனக்குப் பிடித்திருக்கிறதா, பார்!

கிட்டு: (சுற்றிப் பார்த்துவிட்டு) சக்கரவர்த்தி. இது மிகவும் உன்னதமான கோவில். இந்தக் கோவில் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. இதைக் கட்டி முடித்த தங்களின் பெருமையை என்னுல் புகழ இயலாது! பாரத தேசத்திலேயே இந்தக் கோவில்தான் சிறந்த முறையில் விளங்குகிறது என்றே சொல்லலாம்! பாரத தேசம் முழுவதும் தீர்த்த யாத்திரை செய்திருக்கிறேன். இதைப் போன்ற அழகிய கோவிலே நான் கண்டதில்லே! உயர்ந்த கோபுரம்! சுத்தத் தங்கத்தாலான புத்த விக்கிரகம்!

கனி: வாலிபனே, 'நான் ஒரு கோவிலேயும் கட்டப் போவதில்லே' என்று முன்னெரு காலத்தில் நீ சொன்னுய்! ஞாபகமிருக்கிறதா?



''ஸார்! நீங்கதானே, 5-ஆம் நம்பர் வீட்டுக்காரர்?''

''ஆமா!''

''உங்களுக்குத் தந்தி வந்திருக்கு.''

''தந்தியா? ஐயையோ! எனக்கு வேணும். யாருக்காச்சும் கொண்டுபோய்க் கொடு.''

---

கிட்டு: மகாப் பிரபோ, மன்னிக்க வேண்டும். முன்பு நான் சிறுவனுக இருக்கும் பொழுது தங்களின் மகிமையை அறியாமல் ஒரு நாள் ஒரு குதிரை வீரன் முன்பு தங்களைப் பற்றித் தவறுதலாகப் பேசிவிட்டேன். அவன் தங்களிடம் சொல்லி விடுவானென்று அப்பொழுது நான் நினைக்கவில்லை. சிறுவனுகிய நான் செய்த குற்றத்தைப் பொறுத்தருள வேண்டும்! (கனிஷ்கரின் காலில் விழுகிருன்)

கனி: உத்தமனே; எழுந்திரு. அஞ்சாதே: (தூக்கி நிறுத்தி அவன் கண்ணீரைத் துடைக்கிருர்) உத்தமனே; இதோ பார்! [தன் அரச உடையைக் கழற்றிவிட்டுக் குதிரை வீரன் உடையில் நிற்கிருர்.]

கிட்டு: மன்ன, மன்னிக்கவேண்டும்! தங்களின் முன்னிலையிலேயே தங்களைப்பற்றி அவமரியாதையாகப் பேசிவிட்டேன்! மன்னிக்க முடியாத தவறு செய்துவிட்டேன்!

கனி: (அன்பு கனிந்த வார்த்தைகளில்) வாலிபனே; உன் மனத்தில் தோன்றியதைச் சொன்னுய்; அதில் தவறில்லை.

கிட்டு: சக்கரவர்த்தி! நான் செய்த அபசாரத்திற்குப் புத்த பகவான் என்னை மன்னிப்பாரா?

கனி: சிறந்தவனே, நீ செய்தது அபசாரமல்ல; உபசாரம்தான்! கவலைப்படாதே! எவன் பகவானுக்குப் பக்தியுடன் பூவோ, கனியோ, நீரோ அளிக்கிருனே, அந்த உண்மைப் பக்தனின் நிவேதனங்களைப் பகவான் அமிர்தமாக ஏற்றுக் கொள்கிருர்! நீ குழந்தையாக இருக்கும்பொழுது கட்டிய மண் கோவில் இந்தப் பிரம்மாண்டமான கோவிலைவிடச் சிறந்தது! உன்னைப் புத்த பகவான் காப்பாற்றுவாராக!

கிட்டு: மகாப்பிரபோ! தாங்கள் கொண்டுள்ள சிறந்த பக்தியே இங்கே திருக்கோவில் உருவில் காட்சியளிக்கிறது என எண்ணுகிறேன்!

கனி: வாலிபா! உண்மையான பக்திக்கு அபூர்வமான சக்தியுண்டு. அந்தப் பக்தியைச் செயலாக்கத் தூண்டியவன் யார் தெரியுமா? நீதான்! தெய்வ பக்தி மிகுந்த உன்னையே இக்கோவில் நிர்வாகியாக நியமிக்கப் போகிறேன். ஏற்றுக்கொள்வாயாக!

கிட்டு: பிரபோ; தங்கள் உத்தரவு.

[கோவிலில் பூஜை நடக்கிறது. சங்குகள் ஒலிக்கின்றன. பேரிகைகள் முழங்குகின்றன. மணிகள் இனிய நாதத்தை எழுப்புகின்றன. அலை வரும் அன்பு வெள்ளத்தில் மூழ்கி மெய்ம்மறந்து பகவானை வழிபடுகிருர்கள்.]

# சைக்கிள் ஆசை

**விண்ணமுதன்**

"தம்பி!''

உலர்ந்த நாக்கிலிருந்து, ஓய்ந்த சொற்கள் வெளிவந்தது கண்ணனிடமிருந்து. அந்தச் சொல்லிலே பாசம் பற்றிக்கொண்டிருந்தது. ஏக்கம் எதிரொலித்தது. ''தம்பீ!''

தாழ்ந்த தலையை நிமிர்த்தி, வற்றி வதங்கிய கண்களால்... வாஞ்சை பொங்கத் தன் அண்ணனைப் பார்த்தான் சேகர். அதற்குத்தான் எவ்வளவு சக்தி! கண்ணனின் சுருங்கிய பால்முகம் பரந்து விரிந்தது. ''தம்பீ! கஞ்சி கொண்டு வரட்டுமா?''

ஆசை அலை மோத, அண்ணன் என்ற பாசம் அதிர, ஆவலுடன் கேட்டான். அணையப் போகும் விளக்கு கடைசியில் அதிக ஒளியை வீசுவதைப் போல.... தொங்கிய தலையைத் தூக்கி உலர்ந்த உதட்டை விரித்துவறண்ட நாக்கை அசைத்து, ''ஊம்..'' என்றான் சேகர். வார்த்தை வெளி வரவில்லை! ஆனால் அண்ணன் புரிந்துகொண்டான். வெற்றியடைந்த வேங்கை போல் உள்ளே நுழைந்தான் கண்ணன். ஆனால்.. உள்ளே சென்றதும் உயிரற்றவனாய் மலைத்து நின்றான்! ஏன்? .. பசி கொண்ட வேங்கை பருத்த ஆடு ஒன்றைக் கண்டு, தன் இருப்பிடத்திற்கு எடுத்துச் சென்று, பசி போக்கப் பாயும் போது அது ஆட்டுத் தோல் போர்த்த வைக்கோலாக இருந்தால்? .. அந்த நிலையைத்தான் கண்ணன் அடைந்தான். உடல் நலக் குறைவால், ஒரு வாரம் உண்ணாது, உறங்காது ஓயாத துன்பத்தில் உழன்று, ஒடுங்கும் தறுவாயில் இருக்கும்-தம்பி! உலகையே வெறுத்து, அவனையே கதியென்று தம்பியிருந்த மதிக்க முடியாத-மாணிக்கம், இன்று - இப்பொழுது- கண் திறந்து கஞ்சி கேட்கும் போது..இல்லை! இல்லை! ஏன்? எப்படியிருக்கும்? எங்கிருந்து வரும்? வெறி பிடித்தவன்போல் ஓடினான் கண்ணன். தம்பி - அவன் உயிரான சேகர் - ஒடுங்கிய சடலம் போல் உறங்கிக்கொண்டிருந்தான். ஓடிய கால்கள் ஓய்ந்து நின்றன. ஒடுங்கப்போகும் அந்தச் சடலத்துக்குத்தான் என்ன சக்தி! கண்ணன் தன் தம்பியின் அருகில் அமர்ந்தான். அவன் மனம் கடந்த கால நிகழ்ச்சிகளைத் திரைப்படமாக்க



ஒருவர்: பொதுவாழ்க்கையில் ஒருவன் முன்னேற வேண்டுமானால் தன்னம்பிக்கையுடன் கீழேயிருந்து படிப்படியாக உழைத்துத்தான் மேலுக்கு வர முடியும்.

மற்றவர்: என் விஷயத்தில் இது சாத்தியம் இல்லை. நான் கிணறு வெட்டும் காண்ட்ராக்டர் ஆயிற்றே!

—T. K. ராமசாமி.

முயன்றது. அவனுடைய வற்றிய கண்களிலிருந்து இரண்டு சொட்டுக் கண்ணீர் சுரந்து சேகரின் நெற்றியில் விழுந்து, பழுக்கக் காய்ச்சிய இரும்புத் துண்டில் விழுந்ததைபோல் மறைந்தது. கண்ணன் கண்கள் அதை நோக்கவில்லை! திரையாக்கப்பட்ட கடந்த கால நிகழ்ச்சிகளைக் கண்டுக்கொண்டிருந்தன.

* * *

"அம்மா! அம்மா! இங்கே வந்து பாரேன், நான் எங்கே இருக்கேன்னுட்டு!" என்று மகிழ்ச்சி பாதியும் மழலை பாதியுமாகக் கூவினன் சேகர். அடுக்களையிலிருந்த அவன் அம்மா ரங்கம்மாள் அவசரமாக ஓடி வந்தாள். கண்ணன் சைக்கிள் ஓட்டுவதையும்.. பின்னல் சேகர் 'ஜம்' மென்று உட்கார்ந்திருப்பதையும் கண்டு, 'இந்நேரம் அவர்கள் அப்பா இருந்தால் இதைக் கண்டு எவ்வளவு சந்தோஷமடைவார்' என்று எண்ணி இதயம் மகிழ்ந்தாள்.

"அண்ணு! அண்ணு! அம்மா வந்து.. நாம் சைக்கிளில் போவதைக் கண்டு பொருமை கொள்கிருள். அவளையும் சற்று ஏத்திக்கிட்டுப் போ அண்ணு!" குறும்புடன் மழலையைக் குழைத்துச் சொன்னன் சேகர்.

"எங்கண்ணு! ஒங்கப்பா உன் மழலையைக் கேட்டு அப்படியே மலைச்சு போயிடுவாருடா! திருஷ்டிப் பட்டுடப் போவுது. வாடா!" என்று அப்படியே தூக்கிக்கொண்டு உள்ளே சென்ருள்.

* * *

சொத்துச் சேர்க்க, பணம் சம்பாதிக்கத் தம் சொந்த நாட்டை விட்டு அயல் நாட்டுக்குச் சென்றவர்களில் நமசிவாயமும் ஒருவர். செல்லும்போது கண்ணன், சேகர் என்ற இரண்டு குழந்தைச் செல்வங்களையும் மனைவியையும் விட்டுவிட்டுத்தான் சென்ருர். இரண்டு வருஷங்கள் பொருள் ஈட்டுவதில் கழித்தார். சேர்த்த பணத்தைச் சொந்த நாட்டுக்கு அனுப்பாமல் அங்கேயே ஒரு பாங்கில் போட்டு வைத்திருந்தார். அப்பொழுது இலங்கையில் தமிழருக்கும் சிங்களவருக்கும் இன வெறி மூண்டது. அதன் பயன்..பீரங்கிகள் வெடித்தன! பீரிட்டது பல்லாயிர மக்களின் பச்சை ரத்தம்! வெட்டுண்ட முண்டங்கள்! வீசி எறியப்பட்ட தலைகள்! தலையை இழந்தோர்! தாரத்தை, மக்களை இழந்தோர்! எங்கும் கூக்குரல்! ஏக்கத்தின் எதிரொலி வெறி அடங்கியது.

இந்தக் கலகச் செய்தியைக் கண்டு, கலங்கி நின்ற ரங்கம்மாளுக்கு.. திடீரென ___ ஒரு தந்தி



வந்தது. திகிலுடன் பிரித்துப் பார்த்தாள். 'நமசிவாயம் குண்ட

டிப்பட்டு மாண்டார்!' அந்தக் குண்டு நமசிவாயம் உயிரை மட்டும் குடிக்கவில்லை! சில நாட்களில் ரங்கம்மாள் உயிரையும் குடித்துவிட்டது. கண்ணன், சேகர்- இருவரும் அநாதைகளாக்கப்பட்டனர். விதி சதி செய்தது. கண்ணனுக்கு வயது பன்னிரண்டு; சேகருக்கு வயது ஏழு. கண்ணன் தன் தம்பியை..ஒரு குறையும் இல்லாது வளர்த்து வந்தான். அதிகமாகச் சொல்லப்போனால் அவனுக்காகவே உயிர் வாழ்ந்தான் எனலாம். இப்படியாக..அண்ணனும் தம்பியும் அன்பினால் அரை வயிற்றுக் கஞ்சியுடன் ஆனந்தமாக வாழ்ந்து வந்தனர். இப்படி அவர்கள் இருந்து வருவதைக் கண்ட வறுமை அரக்கனுக்கு, எப்படியிருந்ததோ தெரியவில்லை! அரக்கன் தன் கோரப் பற்களை நீட்டிக் கொண்டு அவர்களை அணுகினான். அதன் பலன்?..அவர்கள் அருமையாகப் போற்றிப் பூசித்து வந்த ஒரே ஒரு சைக்கிளையும் விற்று வறுமை அரக்கன் வாயில் போட்டனர்; போதவில்லை! நெருங்கிக்கொண்டே வந்தான். இப்பொழுது பூர்ணமாகப் புகுந்து விட்டான்.



* * *

சிந்தனைத் திரை அறுந்தது. நீர் வடிந்த நிலமாயிருந்த தன் கண்களால் சேகரை நோக்கினான் கண்ணன். காற்றில்லாத சைக்கிள் ட்யூப்பைப் போன்றிருந்த உடல்; காலையில் மலர்ந்து அந்தியில் வதங்கி, பொலிவிழந்து, உதிர்ந்திருக்கும் பூவைப் போன்ற முகம்; எண்ணி ஏங்கினான் கண்ணன். 'சைக்கிள் டியூப்பைப் பம்பின் துணை கொண்டு காற்றடித்தால் உப்பி விடும். ஆனால்..என் தம்பி..என் உயிர்..சேகர்..நினைக்கவே பயங்கரமாக இருக்கிறதே!..ஐயோ!.. என் தம்பி..என் தம்பி பிழைக்க முடியாதா?' ஏக்கத்துடன் சேகரை நோக்கினான். கேள்விக்குப் பதில் கூறுவதைப்போல..சேகர் கண் விழித்தான். முன்போல் ஏக்கத்துடன் அல்ல! எதையோ தேடும் அலங்கோலத்துடன் அலட்டிக் கொண்டான். தம்பி பிழைத்துக் கொண்டான். சுய நினைவு வந்து விட்டது என்று எண்ணினான் கண்ணன். ஆனால்?..தேளுக்குப் பயந்தான். தேள் போய்விட்டது. அதற்குப் பதில் கொடிய வேங்கை காத்திருந்தது. அதுதான் அவன் நிலை. 'சுய நினைவு வந்துவிட்டது' என்றெண்ணினான். அதற்குப் பதில் ஜுரமிகுதியால்.. ''அண்ணா..சைக்கிள்.. கஞ்சி..க..'' ஓயாது, திரும்பத் திரும்ப ஒப்பித்தான். கண்ணன் உள்ளம் ஒடிந்தது. அவன் எண்ணத்திலே, 'தம்பி, பிழைக்க வேண்டுமானால் சைக்கிள்..பணம் தேவை!' என்று ஒலித்துக் கொண்டேயிருந்தது. ''தம்பி! இதோ, சைக்கிள் வாங்கி

வறேன்'' என்று சொல்லிவிட்டு, வீதியில் இறங்கி ஓடினான். எதிரே! ஒரு சைக்கிள் கனவேகமாக வந்து கொண்டிருந்தது. கண்ணன் கீழே கிடந்த ஒரு கம்பை எடுத்தான். சைக்கிள் நெருங்கியது மறு விநாடி சைக்கிள் தரையில் கிடந்தது. சைக்கிளில் வந்தவர் உருண்டு ஒரு மூலையில் போய் விழுந்தார். பக்கத்தில் ஒரு பர்ஸ்! கண்ணன் சுற்று முற்றும் பார்த்தான். பர்ஸை எடுத்தான். சைக்கிளில் பறந்தான். ஆவலுடன் கதவைத் திறந்து, ''தம்பி! இதோ சைக்கிள்'' என்று ஆனந்தத்துடன் கூவியபடி உள்ளே நுழைந்தான். ஆனால்—

''ஏய், திருட்டுக் கழுதை நில்லுடா!'' என்று அதிகாரத் தொனியில் அதட்டியதைக் கண்டு, திடுக்கிட்டுத் திரும்பினான். அங்கே போலீஸ் ஜவான்கள் இருவர்; சைக்கிளில் வந்தவர்; இன்னொரு பெரியவர். ''அதாங்க என் சைக்கிள்! (சைக்கிளில் வந்தவனைக் காட்டி) இவன்தாங்க சைக்கிளையும் பணத்தையும் திருடிக்கொண்டு ஓடியவன்'' என்றார் அந்தப் பெரியவர். கண்ணனுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. ஏதோ யோசனையுடன் அவர்கள் கூப்பிடுவதையும் லட்சியம் செய்யாது சைக்கிளைத் தள்ளிக்கொண்டு தம்பியிடம் ஓடினான். ''தம்பி! இதோ! சைக்கிள் கொண்டு வந்துட்டேன்'' என்றான். படுக்கையிலிருந்து விசுக்கென்று எழுந்து ஓடிவந்தான் சேகர். கண்ணன் சைக்கிளை விட்டு விட்டுச் சேகரை அணைக்கக் கை நீட்டினான்.

தடார்ர்! ''அண்ணா ஆ..''

''த..ம்..பி!..'' சைக்கிளுக்குக் கீழே—இரண்டு உயிரற்ற சடலங்கள். எல்லோரும் ஓடி வந்தனர். பெரியவர், கீழே கிடந்த, பாசத்தால் பட்டுப் போன படர்க் கொடிகளைக் கண்டார். சுவரை நோக்கினார். திருமணக் கோலத்தில் ஒரு படம். அதிலுள்ள மங்கையை உற்று நோக்கினார். அடுத்த விநாடி, ''ரங்கம்மா! நீயா?..நீயா?..நாம் பெற்ற செல்வங்களா, இவர்கள்! நான் பாவி! பாவி..படுமோசக்காரன்..அந்தக் குண்டு வீச்சிலேயே இறந்திருக்கக் கூடாதா? எதற்காக இங்கே வந்தேன்? இந்தக் கோலத்தைக் காண்பதற்குத் தானா?'' தலை சுற்ற மயக்கமாகக் கீழே விழுந்தார்.

அன்பிற்குமுண்டோ? அடைக்குந் தாழ்வவர்
புன்கணீர் பூசறரும்..

என்ற பொய்யா மொழியின் புலமையைப் பொய்ப்பிக்க முடியுமா?

—

## சரியான..... யோசனை!



# எறும்பரசன்

## திருச்சியண்ணா

இருள் கரைந்து. பொழுது விடிகிறது.

எறும்பரசன் மாளிகையில் எறும்பு கான கோஷ்டி இன்னிசை எழுப்புகிறது. எறும்பரசன் 'சுரீர்' அலங்காரப் பட்டு மெத்தையை விட்டு எழுந்து, கண் விழித்தார். அப்போது, ''மகாராஜா, மகாராஜா'' என்று அலறல் வந்தது.

பரபரப்புடன் திரும்பினார் சுரீர். அலறிப் புடைத்துக்கொண்டு வந்தது இளவரசனது மெய்க்காவலாளி எறும்பு. அலறலைக் கேட்ட எறும்பரசனின் கண்கள் சிவந்தன.

''என்ன சமாசாரம்? ஏன் இப்படி அலறுகிறாய்?''

மெய்க்காவல் எறும்பு பதில் கூறிற்று. ''மகாராஜா, இளவரசைக் காணவில்லை. அறையிலும் அவரைக் காணோம். அரண்மனையிலும் காணோம்!''

இந்தச் செய்தி சுரீர் என்று குத்தவே, ''ஓடுங்கள் சேவகர்களே, தேடுங்கள் இளவரசனை!'' என்று உத்தரவு போட்டது எறும்பரசன் சுரீர்.

எறும்புக் காவலாளர்கள் சிட்டுப் போல் பறந்தார்கள். அரண்மனைப் பூங்காவிலும், வாவிகளிலும், ராஜ பாட்டைகளிலும் இளவரசனைத் தேடியலைந்தார்கள். ஆயினும் இளவரசைக் காணோம்.

இளவரசன் 'வெடுக்' எப்போதுமே இப்படித்தான். வெடுக் என்பது, இளவரசனுடைய காரணப் பெயர். யாரைக் கண்டாலும் 'வெடுக் வெடுக்' என்று கடித்துவிடும். யாரிடமும் சொல்லாமல் கொள்ளாமல் மறைந்துவிடும். வெகு நேரம் பணியாட்கள் தேடித் திரிவார்கள்; கதறி அழுவார்கள். இளவரசன் 'வெடுக்' சிரித்துக்கொண்டே, மறைவிடம் விட்டு வெளியே வருவது வழக்கம்.

இளவரசன் வெடுக் செய்யும் துடுக்கைச் சொல்லிமுடியாது. பெரியோரை மதிக்கவே செய்யாது. அவர்கள் சொல்லை மீறி நடப்பதிலே அதற்கு ஓர் ஆனந்தம்.

வீண் வம்புகளை இழுத்துக் கொண்டு வரும். எறும்பரசன்



சுரீர், தன் மகனுக்கு எவ்வளவோ புத்திமதி சொல்லிப் பார்த்தும் பயனில்லை. அரண்மனையிலே இளவரசன் வெடுக் வைத்ததுதான் சட்டம்!

இளவரசனைக் காணுமல், பணியாட்கள் தேடி அலைந்தார்கள். சாரி சாரியாக எறும்புக் காவலாளிகள் ஓடினர்கள். என்ன பயன்? இளவரசைக் காணவில்லை என்ற செய்தியே கொண்டு வந்தார்கள்.

பொழுது ஏற ஏற, எறும்பரசன் கவலை ஏறிக்கொண்டிருந்தது. மாலை வந்தது. பொழுது இறங்கி விட்டாலும், எறும்பரசன் கவலை மட்டும் இறங்கவே இல்லை. கவலையே உருவாக, சிலைபோல் உட்கார்ந்திருந்தது எறும்பரசன்.

அப்பொழுது, "மகாராஜா" என்றது ஒரு குரல். திடுக்கிட்டுத் திரும்பிய எறும்பரசன், தன் எதிரே ஓர் எறும்பு வீரனைக் கண்டது. வீரனுக்கு மூச்சு வாங்குகிறது. மேலெல்லாம் ஒரே புழுதி!

வணக்கம் செலுத்திவிட்டு, வீரன் ஆரம்பித்தான். "ராஜாதிராஜ, ராஜ கம்பீர, ராஜப் பிரதாப!" என்று, மூச்சுத் திணறிய படி ராஜ பட்டங்களைக் கட்டி இழுக்கும்போது, எறும்பரசன் சுரீருக்குக் கோபம் சுருக்கென்று வந்தது.

"விருது கூறுவது இருக்கட்டும். வந்த காரியமென்ன? உடனே சொல்!" சூடாகவே வந்தது வார்த்தை. படபடவென்று ஆரம்பித்தான் எறும்பு வீரன். "மகாராஜா, இளவரசு 'வெடுக்கனர்' வன வேட்டை ஆடப் போயிருக்கிருர். அவர் பின்னல் போன பட்டாளத்திலே நானும் ஒருவன். மகாராஜா, இளவரசு பெரிய ஆபத்திலே சிக்கிக்கொண்டு தவிக்கிருர்!"

இடை மறித்த எறும்பரசன், "ஆபத்தா? என்ன ஆபத்து? சீக்கிரம் சொல்!" என்று அலறினர். அதிர்ச்சியினல் அவரது உடல், சாண் உயரம் எழும்பி விழுந்தது.

எறும்பு வீரன் தொடர்ந்து சொன்னன்: "அரசே, போகும் வழியில், இளவரசு வெடுக்கனர் செய்த அட்டகாசம் தாங்கவில்லை. பட்டாளத்து ஆட்களை வெடுக் வெடுக் என்று கடித்துக்கொண்டு வந்தார். எதிரே வந்தவருக்கு வெடுக்! காட்டுப் பூனைக்கு வெடுக்! யானைக்கு ஒரு வெடுக்! மானுக்கு! நரிக்கு! புலிக்கு! கரடிக்கு! எல்லாருக்கும் வெடுக்! வெடுக்! வெடுக்!"

எறும்பரசன் பொறுமையைக் கைவிட்டது. எல்லை மீறிய கோபத்தில், "சங்கதியைச் சீக்கிரம் சொல்லு" என்று வீரனின் காதுகளைப் பிடித்துக்கொண்டு திருகினர் எறும்பரசன்.

அதே சமயம், "மகாராஜா" என்று கூறிக்கொண்டு வந்தான் இன்னேர் எறும்பு வீரன். "என்ன சமாசாரம்?" என்று, அவன் மீது பாய்ந்தார் எறும்பரசன். வந்த வீரன் விலகி நின்று ஆரம்பித்தான்.

"மகாராஜா, இளவரசு வெடுக்கனரைப் பின்தொடர்ந்து சென்ற பட்டாளத்தைச் சேர்ந்தவன் நான். வேட்டையில் வெற்றி கண்டோம். நிறையத் தானியங்கள் சேகரித்தோம். தேனும் தினை மாவும் சேர்த்தோம். இன்னும் பல இனிய பண்டங்கள் திரட்டிக் குவித்தோம். ஆனந்தக் கூத்தாடினேம்!"

"கூத்தாடியது இருக்கட்டும். இளவரசு எங்கே?" என்று படபடத்தார் சுரீர்! அவன் மேல் விழுந்து, சுரீர் என்று கடித்து விட்டார். கடிபட்ட வீரன், வலி பொறுக்க முடியாமல், விழுந்து புரண்டான். சுரீர் அவனைத் தூக்கி நிறுத்தி விசாரிக்க, அவன் தொடர்ந்து சொன்னன்:

"இளவரசர் ஒரு சிறு குடிசைக்குள்ளே போனர். நாங்கள் வெளியே நின்றிருந்தோம். உள்ளே யாரோ கோபமாகப் பேசுவதாகக் கேட்டது. பயத்துடன் உள்ளே எட்டிப் பார்த்தோம்; ஒன்றுமே விளங்கவில்லை! தயங்கித் தயங்கி, உள்ளே சென்றேம். என்ன ஆச்சரியம்! அங்கே யாருமே இல்லை!"

ஆச்சரியத்தினல் எழும்பி விழுந்த சுரீர், "குடிசைக்குள்ளே சென்ற இளவரசு என்ன வாயிற்று?" என்று விசாரிக்க,



எறும்பு வீரன் சொல்லத் தெரியாமல் விழித்தான்.

அதே கணம், ''மகாராஜா'' என்று அழைத்துக்கொண்டே, மந்திரி எறும்பு உள்ளே வந்தது. அவரை அணைத்துக்கொண்டு வந்த ஒரு வீரன் பேச ஆரம்பித்தான். ''மகாராஜா. இளவரசர் குடிசையை விட்டு வெளியே வரும்போது, அவருடைய உருவமே மாறிவிட்டது. மலைபோல் ஆகிவிட்டார். யானைபோல அசைந்து வருகிறார். அவர் பக்கத்திலே நின்றிருந்தேன். இளவரசு வரும்போது, அவர் காலடியிலே அகப்பட்டுக் காயத்தோடு பிழைத்து வந்தேன்!''

கதை கேட்டுக்கொண் டிருக்கும் பொறுமை இல்லை எறும்பரசனுக்கு. ''வாரும் மந்திரி, படை திரட்டுங்கள். இளவரசனைத் தேடி அழைத்து வருவோம்!'' என்று உத்தரவு போட்டது.

அதே சமயம், எறும்பு மாளிகையே ஆடத் தொடங்கிற்று. இடி இடிப்பதுபோல ஓசை எழுந்தது! மாளிகை வாசலிலே, ஒரே கூக்குரல். எறும்பரசன் சுரீர், மந்திரி, காவலாளிகள் எல்லாருமாக மாளிகை வாசலுக்கு ஓடினார்கள்.

வானுக்கும் பூமிக்கும் எட்டிய ஓர் உருவம். அது மாளிகைக்குள் நுழைய முயல்கிறது. காவலாளிகள் தடுக்கிறார்கள்! ஒரே குரல்! எங்கும் பரபரப்பு! எறும்பரசனைக் கண்டதும், கூக்குரல் சற்று அடங்கிற்று. கும்பல் விலகி வழி திறந்தது. அப்போது படுகாயமடைந்த ஒரு காவலாளி ஓடி வந்து, ''மகாராஜா, அதோ பாருங்கள், அந்த அந்நியன்! அந்த முரட்டு உருவம் மாளிகைக்குள்ளே நுழையப் பார்க்கிறது. தடுத்த பல வீரர்கள் இறந்துவிட்டார்கள்'' என்றான்.

எறும்பரசன் திகைப்போடு அந்த உருவத்தைப் பார்த்தான். அதே கணம், ''அப்பா'' என்று ஒரு குரல் கேட்டது. இளவரசன் குரல்தான். ஆனால் எவ்வளவு முரட்டுக் குரல்!

''நான்தான் அப்பா. இந்த உருவத்தில் இருக்கிறேன்'' என்று கூறிக்கொண்டு, எறும்பரசன் அருகில் வரவும், எறும்பரசன் பரபரப்புடன் விலகிக்கொண்டு, ''மகனே தள்ளி இரு. அருகில் வராதே. அங்கிருந்தபடியே நடந்ததை எல்லாம் விவரமாகச் சொல், மகனே!'' என்றது.

இளவரசன் வெடுக் பேச ஆரம்பித்தான். ''அப்பா, வேட்டையாடிவிட்டு, நான் ஓய்வெடுக்க, ஒரு குடிசைக்குள் சென்றேன். அங்கே ஒரு முனிவர் படுத்திருந்தார். அவரது காதினுள்ளே ஓடி விளையாடத் தொடங்கினேன். விளையாடி வரும்போது, வெடுக் என்று கடித்துவிட்டேன். முனிவர் விழித்துக்கொண்டு, காதுக்குள்ளிருந்த என்னை வெளியே எடுத்தார். தன் முகத்துக்கு நேராகப் பிடித்துக்கொண்டு, பல்லை நறநற வென்று கடித்தார். நெருப்புக்



தாய்: ஏண்டா இப்படி வெயிலிலேயே சுத்திக்கொண்டு இருக்கியே? காய்ச்சல் வராதா?

பையன்: வெயில்லே சுத்தலேம்மா. சைக்கில்ளேதான் சுத்திக்கொண்டு இருக்கேன்.

—K. S. கிருஷ்ணன்.

கங்குபோல் கண்கள் ஜொலித்தன. 'அடே அற்ப எறும்பே. உனக்கு இவ்வளவு கர்வமா? என்னை வெடுக்கென்று கடித்துத் துன்புறுத்தியவனே, பிடி சாபம். உன் சிறிய உருவம் மாறி, யானைபோல் ஆவாய்!' என்று சபித்துவிட்டார். அப்பா, என் விளையாட்டுப் புத்தியால் வந்த வினையைப் பாருங்கள். மலைபோல உருவம் வந்துவிட்டது. என்னோடு வந்தவர், என்னைக் கண்டு பயந்து ஓடிவிட்டார்கள்! நான் மட்டுமே தட்டுத் தடுமாறி, மாளிகைக்கு வழி கண்டுபிடித்து வந்தேன். உள்ளே வர முடியவில்லையே, அப்பா!''

இவ்வாறு சொல்லி வரும்போது, எறும்பரசன் மீது மழைத்துளி போல் விழுந்தது. விழுந்து மாமந்திரியின் மீதும் தெறித்தது. வானத்தைப் பார்த்தார் மாமந்திரி. ''மகாராஜா மழைத் துளி விழுகிறது. மாளிகைக்குள் சென்று பேசலாமே!'' என்றார் மந்திரி.

''மந்திரி, மழையல்ல இது; மகனின் கண்ணீர்த் துளி இது. என் மைந்தனின் சாபம் நீங்க வேண்டும். பெரு மழையே வந்து, வெள்ளமே புரண்டாலும் கவலை இல்லை. மகனின் சாபம் நீங்க வேண்டும். சாபம் கொடுத்த முனிவரை, முதலில் தேடிப் பிடிக்க வேண்டும். படை தயாராகட்டும்!'' என்று தழுதழுத்த குரலில், உத்தரவு போட்டது எறும்பரசன்.

கட்டளை பிறந்த சமயம், ''எறும்பரசா, என்னைத் தேட வேண்டிய அவசியமில்லை. நானே வந்துவிட்டேன்'' என்று குரல் கேட்டது.

குரல் வந்த திசையிலே திரும்பிப் பார்த்தது, எறும்பரசன். யாருமில்லை. சுற்று முற்றும் பார்த்தது; மந்திரியும் சுற்றிச் சுற்றி விழித்தார். யாரையும் காணோம்! மீண்டும் அதே குரல் கேட்டது.

''எறும்பேசா, என்னைக் காண இயலாது, அவ்வளவு சிறிய உருவம் வந்துள்ளது. எல்லாம் தன்வினை; கோபத்தால் வந்த வினை! கோபம் பொல்லாது. அதை அடக்க வேண்டும். இதை அறிந்தும், ஏனோ கோபத்துக்கு இடம் கொடுத்தேன்! 'சிஷ்யா, வீணாகக் கோபம் கொள்ளாதே. அதனால் உன் தபோபலத்தை இழக்க நேரிடும். கோபத்தை அடக்கு. இல்லையானால் உனக்குத் தீங்கு நேரிடும்' என்று என் குருநாதர் சொல்லையும் மீறிக் கோபம் கொண்டேன். எறும்பு கடித்துவிட்டதென்று கோபம் கொள்ளலாமா? சிறியோர் செய்த பிழை என்று தள்ளாமல் சபித்து விட்டேன். அதனால் நேர்ந்த கதி இது!''

இவ்வாறு யாரோ சொன்னார். எறும்பரசன் விசாரித்தது: ''சுவாமி, இவ்வளவு நேரம் பேசிய நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்?''

முனிவர் சொல்வார். ''எறும்பேசா, நான் உன் மகன் முதுகிலே தான் இருக்கிறேன். என்னை உன்னால் காண முடியாது. பெருத்த உருவின் மீதுள்ள துரும்பு போன்ற என்னைக் காண இயலாது!''

"சுவாமி, என் மகனது சாபம் நீங்க வழியில்லையா? உண்மையாக வருந்துகிறுன் என் மகன். அவனை மன்னித்து, சாபம் நீங்க வழி சொல்லுங்கள் சுவாமி!' என்று வேண்டினுன் எறும்பரசன்.

அப்போது முனிவர் சொன்னுர். "எறும்பரசே, உன் மகன் உண்மையாகத்தான் வருந்துகிறுன். எனக்கும் தெரியும். ஆனல் என் சக்தி குறைந்துவிட்டதே. நான் மீண்டும் சுய உருவம் பெற, பிறர் உதவியை நாட வேண்டியவனுக இருக்கிறேன். பாரிஜாத மலரின் தேன் துளி என்மீது பட்டால் நான் மீண்டும் சுய உருவத்தைப் பெறுவேன். இங்கிருந்து நூறு காத வழியில் உள்ள ஆனந்த வனத்திலே.."

இவ்வாறு சொல்லி வரும்போதே, முனிவரின் குரல் கம்மிப் போயிற்று. வார்த்தைகள் தெளிவாக விளங்கவில்லை. "ஆனந்த வனத்திலே பாரிஜாத மரம் எங்கே இருக்கிறது?" என்று எறும்பரசன் ஆவலோடு கேட்டான். பல முறை வினவினுன். பதில் இல்லை. அலறினுன்! அழுது புலம்பினுன்!

இந்த அழுகுரலைக் கேட்டது தேன் சிட்டு. எறும்பு மாளிகையின் அருகேயுள்ள சண்பகமரத்திலே வசித்து வந்தது அந்தத் தேன்சிட்டு.

எறும்பரசன் நடந்த கதையைக் கூறவே, "ஆனந்த வனம் பெரிய வனமாச்சே. பாரிஜாத மரத்தைக் கண்டுபிடிப்பது சிரமமாயிற்றே. ஆயினும் புறப்படுங்கள். முயன்று பார்ப்போம். என்னல் இயன்ற உதவி செய்கிறேன்!" என்றது தேன் சிட்டு.

எறும்புப் பட்டாளமே புறப்பட்டது. தன் முதுகிலே அந்தப் பட்டாளத்தைச் சுமந்து சென்றது இளவரசன் வெடுக். எறும்பரசனும் மாமந்திரியும் கூடவே சென்றுர்கள்.


பல நாள் கடந்து, ஆனந்தவனம் வந்தது. பாரிஜாத மலரைத் தேடித் தேடி, தேன் சிட்டு பறந்தது. மலரின் மணத்தை மோப்பம் பிடித்துக்கொண்டே எறும்புப் பட்டாளம் எட்டுத் திசையும் ஊர்ந்து சென்றது.

கடைசியில் பாரிஜாத மரம் தென்பட்டது. எறும்புப் பட்டாளம் அதைச் சூழ்ந்துகொண்டது. இளவரசன் அதன் அடியிலே நின்றது. தேன் சிட்டு அந்தப் பரிஜாத மலரின் தேனைத் தன் அலகால் எடுத்து, இளவரசன்மீது தெளித்தது. ஒரு துளி முனிவரின் மீது பட்டதும், அவர் சுய உருவம் அடைந்தார்.

அவரது கருணையால் இளவரசன் வெடுக், மீண்டும் சுய உருவம் பெற்றது. "குழந்தாய்! எறும்பு இளவரசே! யாரையும் அநாவசியமாகக் கடித்துத் துன்புறுத்தாதே. விளையாடக் காலம் உண்டு; அப்போது விளையாடு. இனி உனக்கு நல்ல காலம் உண்டாகட்டும்!" என்று உபதேசித்தார் முனிவர்.

"முனிவரே, புத்தியில்லாமல் விளையாடினேன். தண்டனை அநுபவித்தேன்; போதும்! புத்தி வந்துவிட்டது! உங்கள் மணிமொழியை மறவேன். எல்லாரையும் நேசிப்பேன்!" என்று மனமுருகச் சொல்லிற்று இளவரசு.

முனிவர் விடைபெற்றுக்கொண்டார். எறும்பரசன் தன் மகனேடும் பரிவாரங்களோடும், தன் மாளிகை நோக்கிப் புறப்பட்டது.



பிச்சைக்காரன்: எனக்குக் காது கேட்காதுங்க....

வீட்டுக்காரர்: பின்னே?

பிச்சைக்காரன்: கைதான் கேட்கும்.

—P. கலாசாமி.




## காலை வேளை

காலை வேளை வந்திடும்
காக மெல்லாம் கரைந்திடும்
சோலை வாழும் பறவையினங்கள்
சிறகடித்துப் பறந்திடும். 1

பொற் சேவல் கூவிடும்
பொழுது புலர்ந்து வந்திடும்
எற்றிசையும் இருளகன்று
இன்ப உதயம் ஆகிடும். 2

வானகமும் வெளுத்திடும்
வண்ண மலரும் பூத்திடும்
கானகத்துக் கருங்குயிலின்
கானம் நம்மைக் கவர்ந்திடும். 3

பரிதி எழும்பி வந்திடும்
பனியும் ஓடிச் சென்றிடும்
விரைவு கொண்டு மக்கள் உள்ளம்
வேலை நாடிச் சென்றிடும். 4

கதிரவன் ஒளி பரவிடும்
கமல மலரும் விண்டிடும்
மதுர கீதம் எழுப்பி வண்டும்
மதுவை உண்ண வந்திடும். 5

—கே. சொக்கலிங்கம்.




'அன்புள்ள சுரேஷ்,

நமது காரியங்கள் எல்லாம் சுமுகமாகவே நடப்பதைக் குறித்து மிகவும் சந்தோஷமடைகிறேன். பெருமை மிக்க டி. எஸ். பி. அனுப்பிய லைசென்ஸும் ஒழுங்காகக் கிடைத்தது. மிக்க நன்றிகள்.

துப்பாக்கிக்கும் உடனே வேலையிருக்கும் என்று நான் கனவிலும் கருதவில்லை. வழக்கம் போல் வெள்ளிக்கிழமை இரவு உன் வீட்டுப் பக்கம் ரோந்து சுற்றச் சென்றிருந்தேன். மணி சரியாகப் பதினொன்று. நல்ல அமாவாசை இருட்டு. காம்பவுண்டுச் சுவரினருகே கரிய உருவம் ஒன்று பதுங்கிப் பதுங்கி வந்துகொண்டிருந்தது. திகைத்த நான் டார்ச் வெளிச்சத்தை அதன் முகத்தில் செலுத்தினேன். உருவம் தன் கைக் கத்தியை என்மீது குறி பார்த்து வீசிற்று. நான் பதறவில்லை. கைத் துப்பாக்கியை எடுத்து விட்டதும் அதற்கு நடுக்கம் ஏற்பட்டு விட்டது. எனது உத்தரவின்படி கத்தியைக் கீழே போட்டு விட்டு எனது கேள்விகளுக்குப் பதில் சொல்ல ஆரம்பித்தது.

'தனது பெயர் ராம்சிங் என்றும் தனது இருப்பிடம் பெரும்பண்ணையூர் என்றும் கூறிய அது மேலும் முக்கியமான விஷயத்தைத் தெரிவித்தது.

'எங்கிருந்தோ, ஒரு அநாமதேயக் கடிதமும், நூறு ரூபாய்ப் பணமும் பழைய கேடியான அதற்கு வந்ததாம். அதில் உன்னை அடையாளம் கூறி, உடனே தீர்த்துக் கட்ட அதில் கூறியிருந்ததாகவும், தவறினால் அந்த ஆளைப் பழி வாங்க நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் கண்டிருந்ததாம். எனது துப்பாக்கி முனையில் அவன் அவ்வளவையும் சொல்லிவிட்டது ஆச்சரியம்தான். தற்போது, ஸி. ஐ. டி. அதிகாரி துணையிருப்பதால் கவலையில்லை. கத்தியையும் பாதுகாப்புச் செய்திருக்கிறேன்.

உனது அன்புள்ள,
சேகர்.'

* * *

மறுநாள் வழக்கம் போல் அலுவலகத்தில் டெலிபோனை எடுத்தார் டி. எஸ். பி. "ஹலோ, நான்தான் சிவகுரு பேசுகிறேன். குதிரையின் உடம்பு எப்படியிருக்கிறது?" என்று கேட்டார் அவர். மறுபுறத்திலிருந்து "குதிரை சவாரிக்குப் போயிருக்கிறது" என்ற பதில் நம் காதில் விழுந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. டி. எஸ். பி. யின் முகத்தில் புன்னகை நிலவியது.

சிறிது நேரத்தில் டி. எஸ். பி. யின் அலுவலகத்திலிருந்து அவரது

உத்தரவைத் தாங்கிய வண்ணம் பறந்துகொண் டிருந்தான் ஒருவன்!

அந்த ஆளுடன் பொன்னுரங்கம் சற்று நேரத்தில் திரும்பி வந்து விட்டார்!

''வாட், மிஸ்டர் பொன்னுரங்கம், மாமாவுக்கு உடம்பு சரியாகி விட்டதா?'' என்று ஏளனத்துடன் கேட்டார் டி. எஸ். பி.

''இல்லே ஸார். அவரை இங்கேயே கொண்டுவந்து விடும்படி தந்தி கொடுத்து விட்டேன். வைத்தியம் செய்யச் சௌகரியமாயிருக்கலாம். நேரில் இன்று மாலை செல்லலாமென்றிருக்கிறேன்'' என்று சமாளித்த வண்ணம் பதிலளிக்க முயன்றார் இன்ஸ்பெக்டர்.

''ஐ ஆம் வெரி ஸாரி மிஸ்டர், தாங்கள் லீவை உடனே கான்சல் செய்யும்படியான நிலை ஏற்பட்டு விட்டது'' என்று தயங்கியவாறே கூறிய டி. எஸ். பி. நியூஸ் பேப்பரிலிருந்து வெட்டப்பட்ட ஒரு செய்தித் துண்டையும், போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலிடமிருந்து தாக்கீது ஒன்றையும் பொன்னுரங்கத்திடம் கொடுத்தார்.



'கும்பகோணம், மார்ச் 26: இங்குள்ள அரசாங்க பாங்கியில் ஒரு சிறுவன் பரபரப்பான விஷயத்தை ஏற்படுத்தினன். பதினறு வயதுள்ள அவன் யாவரும் நடமாடிக் கொண்டிருக்கும்போதே, காஷியர் இருக்குமிடம் நோக்கி விரைந்து சென்றான். சற்றும் தயங்காமல் பத்தாயிரம் ரூபாய் மதிப்புள்ள நூறு ரூபாய்க் கட்டுகளைத் தூக்கிக் கொண்டு புறப்பட்டான். சரியான சமயத்தில் 'பாங்க் பியூன்' அவனைப் பிடித்துவிட்டார். நகரெங்கும் இதே பேச்சாக இருக்கிறது.

'பாங்க் கொள்ளைகள் எங்கும் அதிகமாயிருப்பதால் தாங்கள் தகுந்த முன்னெச்சரிக்கை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்றேன்.—இன்ஸ்பெக்டர் ஜெனரல்'

. . . . . . . . .

''ரொம்பப் பயங்கரம் ஸார், பட்டப்பகலில்'' என்று கூறினர் பொன்னுரங்கம்.


''ஆமாம், பயங்கரம்தானேயா. ஆகவே ஒவ்வொரு 'பாங்க்'கிலும் ரகசியமாக ஒரு போலீஸ் ஆபீ

ஸரை நியமிக்கத் தீர்மானித்திருக்கிறேன். தாங்கள் எதில் பொறுப்பேற்கச் சௌகரியமாயிருக்கும்?'' என்று சாதாரணமாகக் கேட்டார் டி.எஸ்.பி. ''தங்களது சொந்த முடிவில்'' என்று சுருக்கமாகப் பதில் அளித்தார் இன்ஸ்பெக்டர்.

''சரி, ஒன்று செய்யும். மனேகரா பாங்கில் இன்று முதல் பொறுப்பேற்றுக் கொள்ளும். அங்கிருந்த விஜயராகவனைத் திருச்சி பாங்குக்கு மாற்றுகிறேன்.'' அவரது முகபாவத்திலோ, குரலிலோ வித்தியாசம் கண்டுபிடிக்க முடியாது. அவரது கூரிய கண்கள் தன் உத்தரவின்பேரில் பொன்னுரங்கத்தின் முகத்தில் நொடியில் ஆயிரத்திலொரு பங்கு நேரத்திற்கு வியாபித்த மின்னலைக் கவனிக்கத் தவறவில்லை!

## 14. பொறியில் எலி

சென்னையிலிருந்து பெரும் அளவில் விசேஷப் போலீஸ் படையினர் தினம் வந்துகொண்டிருந்தனர். சந்தேகப்படாத முறையில் டி.எஸ்.பி.யின் தகுந்த பாதுகாப்பால் ஒவ்வொரு காரியமும் நன்ருகவே நடந்துகொண்டிருந்தது. புதிய விசைத் துப்பாக்கிகள், மெஷின்-கன்கள், சிறு பீரங்கிகள் போன்றவையும் ஏராளமான அளவில் வந்துகொண்டிருந்தன. பந்தோபஸ்துக் குறைவாயிருக்கும் என்று சந்தேகப்படக்கூடிய இடங்களில் பல பிரிவாகப் பிரிக்கப்பட்ட அந்தப் படையினர் சாதா உடையில் வைக்கப்பட்டனர். இவ்வளவிலும் ஒரு பெரும் அதிசயம் என்னவென்ருல் கலெக்டர், டி. எஸ். பி, சுரேஷ் மூன்று பேரைத் தவிர உள்ளூரில் இந்த ஏற்பாடுகள் வேறு ஒருவருக்கும் தெரியாமல் நடவடிக்கை எடுக்கப்பட்டது தான். இந்த



இடைக்காலத்தில் சுரேஷுக்கும் முக்கியமான போலீஸ் பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது.

மேனுட்டு முறையில் கொள்ளை அடிப்பவர்களாதலால் அப்படியே கடைசி நிமிஷத்தில் போலீஸுக்குத் தகவல் தெரிந்தாலும் அவர்கள் அதைப் பற்றிக் கவலைப்பட மாட்டார்கள் என்பது சுரேஷின் அபிப்பிராயம். டி. எஸ். பி.யும் இதைப் பலமாக ஆமோதித்தார். ஆகவே ஏப்ரல் மாதம் முதல் தேதியன்று அவர்கள் நிச்சயம் பிரம்மாண்டமான அளவில் 'பாங்க் கொள்ளை' ஒன்றை எதிர் பார்த்தனர். 'திருச்சி பாங்'கியிலும் தேவையான முன்னேற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இதில் ஒரு வேடிக்கை, பாங்கில் நியமிக்கப்பட்ட சர்க்கார் பந்தோபஸ்து அதிகாரியைப் பற்றி பாங்க் நிர்வாகிகளுக்கே ஒன்றும் தெரியாது என்பதுதான்!

ஆயிற்று..

இதோ இதோ என்று மார்ச் 31-ஆம் தேதியும் வந்துவிட்டது. தம் அறையில் அமர்ந்து கொண்டு மேல் ஏற்பாடுகளை மும்முரமாகச் செய்துகொண் டிருந்த டி.எஸ்.பி. இடைவிடாது அடித்த டெலிபோன் மணியைத் தாங்காது ரிஸீவரை எடுத்தார்.

''நான்தான் சந்திரன் பேசுகிறேன். பெரும்பண்ணையூரில் திடீர்க் குழப்பம். முன் திட்டமிட்டதுதான் என்று தோன்றுகிறது. ரத்தம் ஓடுகிறது பெரும் அளவில். பழைய கேடி ராம்சிங் இனந்தெரியாத பேர்வழிகளால் சுடப்பட்டு விட்டான். போலீஸ் உதவி உடனே தேவை.''

டி.எஸ்.பி.யின் முகத்தில் சற்றே கலக்கம் ஏற்பட்டது. சில விநாடிகளில் ஆயுதம் தாங்கிய உள்ளூர் விசேஷப் படையொன்று இரண்டு போலீஸ் டிரக்குகளில் கிளம்பும் சப்தம் கேட்டது.

''கூப்பிடு, அந்தப் பொன்னுரங்கத்தை'' என்று உறுமினர் மிஸ்டர் மாத்யூஸ்.

சில நிமிஷங்களில் அவர் அறைக் கதவு திறந்தது. உள்ளே நுழைந்தது, சுரேஷ்!

''சபாஷ், சரியான சமயத்துக்கு வந்துவிட்டாயே'' என்று அவனை அவர் வரவேற்பதற்கும், பொன்னுரங்கம் அங்கு வந்து சேருவதற்கும் கனகச்சிதமாக இருந்தது.

''என்ன ஓய், டூட்டி யெல்லாம் சரியாகப் பார்க்கிறீரா?'' சற்றே ஏளனம் கலந்த முறையில் கேட்டார் டி. எஸ். பி.

''எஸ்ஸார்.''

''என்ன எஸ் ஸார்?'' அநாவசியமென்றுப் பட்டாலும் காரணத்துடனே கேட்டார் மாத்யூஸ். அவரது கண்களில் பாதி கைக் கடிகாரத்தையும் மறுபாதி பொன்னுரங்கத்தின் சிவந்த முகத்தையும் பார்த்துக் கொண்டிருந்தன!

பொன்னுரங்கத்திற்கு ஆத்திரம். சிறு பையனைப்போல் காணப்படும் சுரேஷுக்கு நல்ல மரியாதை, ஆசனம். அவனுக்கு எதிரில் தனக்கு அவமானம்!

''என்ன, இந்தப் பையனைப் பற்றி என்ன நினைத்தீர்?'' இது டி.எஸ்.பி. பொன்னுரங்கம் துணுக்குற்றார்.

''என்ன, என்னிடமே காது குத்துகிறீர்? சரி; போனல் போகிறது. இவர்தான் மிஸ்டர் சடகோபன். புதிதாக இங்கே மாற்றலாகி வந்திருக்கும் உதவி சூபரின்டெண்டென்ட். பார்த்தால் சிறு பையன் போலிருக்கிறுர் என்று நினையாதேயும். சாப்பிட்டு விடுவார் உம்மைச் சாப்பிட்டு.''

''எஸ் ஸார்!'' இயந்திரம்போல் பொன்னுரங்கத்தின் உதடுகள் வார்த்தையை உதறின சிரமப்பட்டு. சுரேஷினுல் சிரிப்பை அடக்க முடியவில்லை.

''இங்கு வாரும். உமது வீட்டு டெலிபோன் நெம்பர் என்ன?'' என்று கேட்டார் மாத்யூஸ்.

''டயலை முதலில் திருப்பும், நான் சொல்வதைச் சொல்லும்; டெலிபோனில் அதிகமாக வேறென்றும் சொல்ல வேண்டாம்.''

பொன்னுரங்கத்தின விரல்கள் நம்பரைச் சுழற்றின. அவரது கையை 'வெடுக்'கென்று வெளியே தள்ளினர் டி.எஸ்.பி. அவரது முகத்தில் ஆத்திரம். ''உம் வீட்டு நம்

பர் அதுவல்ல. அவசரத்தில் 'ராங் நம்பரை'க் கூப்பிட்டு ஏன் பிறருக்குத் தொந்தரவளிக்கிறீர்?'' என்று கூறியவாறே தாமே டயல் செய்தார் டி. எஸ். பி.

பொன்னுரங்கத்தின் முகத்தில் சிவப்பேறியது! தம் டெலிபோன் நம்பரைக்கூடவல்லவா நோட் செய்திருக்கிறார் டி.எஸ்.பி.

''இதைப் பிடியும். நான் சொல்வதைக் கூறும்.''

''நான் நாளை நடுப்பகல் 11½ மணிக்குத்தான் வீடு திரும்புவேன். முக்கியமான வேலையிருக்கிறது.'' கிளிப் பிள்ளையைப் போல் பொன்னுரங்கம் கூறிவிட்டு, டி. எஸ்.பி.யைப் பார்த்தார்.

''ஆமாம், தற்போது மாயவரம் செல்லுகிறீர்கள். எப்போது திரும்புவீர் என்று எனக்குத் தெரியாது.'' விஷமப் பார்வையுடன் கூறினார் டி. எஸ். பி.

''ஆ'' என்று கூச்சலிட்டார் இன்ஸ்பெக்டர்.

''பெரும்பண்ணையூர் குழப்பம் சம்பந்தமாகச் சில தகவல்கள் மாயவரத்திலிருந்து வேண்டியிருக்கிறது. உம்மைத்தான் மிகுந்த பழக்கப்பட்டவர் என்று இவ்வேலையை மேற்கொள்ள அனுப்புகிறேன். இன்னும் ரெயிலுக்கு ஏழு நிமிஷங்கள்தான் இருக்கின்றன. இப்படியே புறப்படும்.''

''அடுத்த ரெயிலுக்குப் போகிறேன் ஸார். ஒரு மணி இடைவேளை இருக்கிறது.'' அழாக்குறையாகக் கேட்டார் இன்ஸ்பெக்டர்.

''சொன்னதைச் செய்யும்'' என்று உறுமினார் டி. எஸ். பி.

''சரி, வருகிறேன்'' என்று திரும்பினார் பொன்னுரங்கம்.

''சரி, தொலையும்'' என்றார் டி. எஸ். பி.!

பொன்னுரங்கம் பற்களைக் கடித்தார்.

அவர் வெளியே சென்றவுடனே இரு கான்ஸ்டபிள்கள் அங்கே தோன்றினர். ''நான் சொன்னதைச் செய்யுங்கள், ஜாக்கிரதை'' என்று கூறி இரண்டு அட்டைப் பெட்டிகளையும், தன் கையெழுத்திட்ட உத்தரவு ஒன்றையும் அவர்களிடம் கொடுத்து விரட்டினார் டி. எஸ். பி.

போலீஸ் ஜீப் ஒன்று இன்ஸ்பெக்டரையும் கான்ஸ்டபிள்களையும் சுமந்துகொண்டு ஸ்டேஷனை நோக்கிப் பறந்துகொண்டிருந்தது.

## 15. எதிர்பாராதது!

இந்த இன்ஸ்பெக்டர் பொன்னுரங்கம் ஒரு பெரிய புள்ளி. பக்தனுக்குக் கடவுள் காட்சியளிப்பது சில நிமிஷமே அல்லது சில மணியே என்றாலும், ஆரம்பம் முதல் அந்தம் வரை எல்லாம் அவர்தானே! இதுபோல், நமது பொன்னுரங்கம் இப்பொழுது வருகிறார், இன்னும் சில நிமிஷங்களில் மறையப் போகிறார் என்றாலும் இவரால்தானே நமக்குப் பெரிய சங்கடங்கள் எல்லாம்!

அப்பேர்ப்பட்ட 'தத்த்வம் அஸி' - அதுதான் நீயும் - யைச் சற்றுப் பின் தொடருவோம்!

டி. எஸ். பி.யின் உத்தரவுகளுக்குப் பணிவதில் தற்போது அவருக்கு இஷ்டமே இல்லைதான். வேலையைக் கூட ராஜினாமா செய்ய அவர் தயார். ஆனால்....

''கடமையைச் செய்ய மறுத்ததற்காக உடனேயே கைது செய்யப்படுவோம்'' என்று அவருக்குத் தெரியும். இருந்தாலும், கிடைத்த சந்தர்ப்பத்தை விடுவானேன்?

தம் ஆத்திரத்தை யெல்லாம் சேர்த்து உடன் வந்த கான்ஸ்டபிள்களிடம் கொட்டினார் அவர். எடுத்ததெற்கெல்லாம் அவர்களிடம் எரிந்து விழுந்தார். கான்ஸ்டபிள்களாவது சும்மா இருக்கப்படாதா? ஒன்றுக்கொன்று ஏதாவது சொல்லி வைத்து எரியும் தீயில் பெட்ரோலையா விட்டு அணைக்கவேணும்?

திருச்சி ஜங்ஷனை அடைந்து இவர்கள் இரண்டாம் வகுப்புப் பெட்டியொன்றில் ஏறவும் ரெயில் புறப்படவும் சரியாக இருந்தது. இன்ஸ்பெக்டருக்கோ கோபத்துடன் பசியும் சேர்ந்துகொள்ளவே என்ன செய்வதென்று தெரியாமல் துடிதுடித்தார்! நடுப்பகல், பாங்கின் அருகிலுள்ள ஹோட்டலில்

டிபன் செய்தது. வீட்டில் இதே நேரத்தில் தினம் ஒரு கை பார்த்துக்கொண் டிருப்பார். ஒன்றும் தற்போது வாங்கக்கூடவல்லவா நேரமில்லாமல் செய்துவிட்டார் இந்த டி.எஸ்.பி.?

ரெயிலோ அவரது மனப் போக்கை அறியாமல் வேகமாய்ப் போய்க்கொண்டே திருச்சிக்கும் அவருக்கும் உள்ள இடைவெளியை விரிவுபடுத்திக்கொண் டிருந்தது.

கடைசியில் மாலை ஏழு மணிக்கு ரெயில் தஞ்சையை அடைந்தது. இன்ஸ்பெக்டரது மீசையும் சற்றுத் தளர ஆரம்பித்தது. ''ஓடுடா, 511. ஐ. ஆர். ஆரில் போய் காபி, டிபன் வாங்கி வா. ஜல்தி ஓடு'' என்று உத்தரவிட்டார் ஒரு கான்ஸ்டபிளை. அவனும் 'போனால் போகிற'தென்று ரெயிலை விட்டு இறங்கி ஓடினான் அவன் தலை மறைந்ததும், துணுக்குற்றவராய் இன்ஸ்பெக்டர், ''டேய், சாதப் பொட்டலம் வாங்கிவரச் சொல்ல மறந்துவிட்டேன். போய்ச் சொல்லி விட்டு வாடா'' என்று இரண்டாவது கான்ஸ்டபிளையும் உத்தரவு செய்தார். அவனோ, சாந்தமாக இடத்தைவிட்டு அசையாமல், ''கவலைப்படாதீங்க எசமான். நம்ப 511 நடையைப் பார்க்க மாட்டானுங்க. இரண்டாம் தடவை போகச் சொன்னா, போறான்'' என்று பதில் கூறினான்.

அப்போது பொன்னுரங்கத்திற்கு வந்த கோபத்தைப் பார்க்க வேண்டுமே! உணவையெல்லாம் முடித்துக் கொண்ட இன்ஸ்பெக்டருக்கு ஒரே அசதியும், களைப்பும் சூழ்ந்துகொண்டது. அவருக்கு நின்ற இடத்தில் நிற்க முடியாமல் வேலை இன்று முழுவதும், என்ன செய்வார், பாவம்!

எவ்வளவு நேரம்தான் தூங்கியிருப்பாரோ அவர் திடீரென்று விழித்துக்கொண்டார். ''இது என்ன ஸ்டேஷன்டா?'' என்று கேட்டார் கான்ஸ்டபிள்களைப் பார்த்து. ''எங்களுக்குத் தெரியாதுங்க'' என்று ஒரே குரலில் பதிலளித்தனர் இருவரும். துள்ளி எழுந்தார் பொன்னுரங்கம்.

''அடடே, திருவிடைமருதூர் வந்துவிட்டதா? மாயவரத்திற்கு இன்னும் நாலு ஸ்டேஷன்தானே இருக்கிறது!'' என்று கூறியபடியே அருகிலிருந்த குளிக்கும் அறையை நோக்கிப் பாய்ந்தார் இன்ஸ்பெக்டர்.

அங்கே....?

அங்கேதான்!

நிதானமாகத் தனது பையிலிருந்து 'சிகரேட் பாக்ஸ்' போன்ற ஒரு சிறு பெட்டியை எடுத்தார் அவர். அதன் மேல்மூடியைத் திறந்தார் அவர். உள்ளே ஒரு சிறிய ஸ்க்ரூ. அதை முடுக்க ஆரம்பித்ததும், வெள்ளி போன்று பளபளக்கும் கனமான கம்பி ஒன்று வெளியே எழும்பிக்கொண்டே வந்தது! ஒரு அடி உயர்ந்ததும் ஸ்க்ரூவை நிறுத்திவிட்டார் அவர். பெட்டியினுள்ளிருந்து ஒரு சிறிய சிமிழ் போன்ற அமைப்பை வெளியே இழுத்தார் அவர். காப்பிடப்பட்ட கம்பியால் பெட்டியுடன் இணைக்கப்பட்டிருந்த அதைத் தன் இடது காதில் பொருத்திக் கொண்டு, பெட்டியை வாயருகில் கொண்டு சென்றார் அவர்.

தற்போது அவர் வாய், ஏதோ மெதுவாகக் கூறத் தொடங்கியது.

''ஒன் டூ த்ரீ ஃபோர் ஃபைவ், ஃபைவ் ஃபோர் த்ரீ டூ ஒன்'' தற்போது அவர் முகம் மலர்ந்தது.

மேலே அவர் கூறுவது என்ன? குடிகெட்டு விட்டதே!

உள்ளே நடப்பது ஒன்றையும் அறியாத கான்ஸ்ட்பிள் இருவரும் தங்களுக்குள் சிரித்துக் கொண்டனர்.

தற்சமயம் அவர்களில் ஒருவன் ஒரு காரியம் செய்தான். ஆம்.. அந்த அறையின் வெளிப்பக்கம் கதவோரமாக நின்றுகொண்டு தன் காதைக் கதவில் பொருத்தினான். இச்சமயம் பார்த்துத்தானா, சந்தோஷப் பற்களுடன் இன்ஸ்பெக்டர் வெளியே வரவேண்டும்?

கான்ஸ்டபிளைக் கண்ட அவர் ஒருகணம் திடுக்கிட்டு விட்டார். ''ஒட்டுக் கேட்கும் நாயே'' என்று கூறிப் பளாரென அவனை ஓர் அறைவிட்டார். (தொடரும்)



# விசேஷ விடுமுறைப் பேட்டி

**சீனு**

"நமது பத்திரிகையில் ஒரு விடுமுறை மலர் வெளியிட வேண்டும். அதற்காகச் சிலரைப் பேட்டி கண்டுவிட்டு வா" என்றார் ஆசிரியர்.

நாலு நாள் லீவு வேண்டும் என்று கேட்பதற்காக ஆசிரியரின் அறைக்குள் நுழைந்த எனக்கு எப்படி இருக்கும்? இருந்தாலும் என் கடமையைச் செய்தேன். நான் பேட்டி கண்டு வந்த விவரத்தைச் சொல்லியதும் ஆசிரியர் என் வேலையைப் புகழ்ந்துவிட்டு எனக்கு ஒரு வாரம் விடுமுறை அளித்துவிட்டார். விடுமுறையில் போகும் அவசரத்தில் நான் இதை எழுதுவதால் சுருக்கமாகவே பேட்டிகளைப் பற்றிக் கூறியுள்ளேன். உங்கள் கற்பனையைக் கொண்டு முழு பேட்டிகளையும் பூர்த்திசெய்து கொள்ளுங்கள்.

* * *

**வி**டுமுறை என்றதும் எனக்குக் காலண்டர் நினைவுதான் வந்தது. ஏனெனில் காலண்டரைப் பார்த்துத்தானே என்றென்று விடுமுறை என்பதை நாம் அறிந்துகொள்கிறோம்? ஆகவே முதலில் காலண்டர் தயாரிக்கும் ஓர் அச்சகத்துக்குச் சென்றேன். அச்சாளர் கூறினார்: "எனக்கு இந்த விடுமுறைகளைக் கண்டாலே பிடிக்கவில்லை. விடுமுறை நாட்களை ஒரு வருஷத்துக்கு முன்னதாகவே அறிவது கஷ்டமாயிருக்கிறது. பிறகு அவற்றைச் சிவப்பு மையில் அச்சடிக்கவேண்டியிருக்கிறது. ஏகச் செலவு. எல்லாவற்றுக்கும் மேலாக, எங்கள் அச்சகத்திற்கு விடுமுறையாகயிருந்தாலும் இல்லாவிட்டாலும் சிவப்பில் அச்சடித்த நாட்களில் என் ஆட்கள் வேலைக்கு வருவதில்லை."

எடுத்தவுடனேயே பாதகமான அபிப்பிராயம்தானா காதில் விழ வேண்டும் என்று எண்ணிக் கொண்டே ஒரு பள்ளிக்கூடச் சிறுவனை அணுகினேன்.

"விடுமுறைகள் போதும் என்ற
மடமையைக்
கொளுத்துவோம்.

விடுமுறைகள் வேண்டும் என்று
வேண்டி நிற்போம் என்றுமே,
விடுமுறை. விடுமுறை. விடு
முறை!''

என்று அவன் கோஷித்துக்கொண்டிருந்தான்.

''என்ன தம்பி விஷயம்?'' என்று கேட்டேன்.

''நமது நாட்டில்தான் விடுமுறைகள் அதிகமாம். பிற நாடுகளில் குறைவாம். நமது நாட்டிலும் விடுமுறை நாட்களின் தொகையைக் குறைக்கவேண்டுமென்று ஒருவர் பத்திரிகையில் எழுதியிருக்கிறார். அதனால்தான் நான் இந்த எதிர்ப் பாட்டுப் பாடுகிறேன்'' என்றான் தம்பி.

அப்போது அங்கே வந்தான் அந்த மாணவனின் அண்ணன். ''பயப்படாதே தம்பி. பத்திரிகையில் எழுதியிருப்பது உன் விடுமுறையைப் பற்றி அல்ல. என்னைப் போல் தொழிற்சாலையில் வேலை செய்வோருக்குத்தான். தொழிற்சாலைகளில் அதிக நாள் விடுமுறை விட்டால் உற்பத்தி குறைந்துவிடுகிறதாம். தேச முன்னேற்றம் தடைப்படுகிறதாம்'' என்று விவரித்துவிட்டு, ''விடுமுறைகள் குறைவாயிருந்தாலும் ஒரு விஷயத்தில் பரவாயில்லை. விடுமுறை தினங்களில்தான் எனக்கு அதிகம் பணம் செலவாகிறது'' என்று விடுமுறை பற்றிய தன் அபிப்பிராயத்தை முணுமுணுத்தான்.

''விடுமுறையாவது மண்ணாவது. தினம் இந்த ஆபீஸ் பைல் முகத்தில்தானே விழிக்கவேண்டியிருக்கிறது?'' என்று அலுத்துக்கொண்டார் அவர்கள் தந்தை. அவர் ஓர் ஆபீசர்.

மெதுவாக அங்கிருந்து நகர்ந்து கடற்கரைப் பக்கம் வந்தேன். எதிரே எனக்குத் தெரிந்த வேர்க்கடலைக்காரன் காலிக்கூடையுடன் சென்றான். ''இன்று ஞாயிற்றுக் கிழமை. என் கூடை சீக்கிரமே காலியாகிவிட்டது. அடிக்கடி இப்படி மாதிரி விடுமுறை தினம் வந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்!'' என்று சொன்னான் அவன்.

ஆனால், ''சீ, ஏண்டா இந்த ஞாயிற்றுக்கிழமை வருகிறது'' என்று அலுத்துக்கொண்டான் ஓட்டல் சர்வர் சாமிநாதன்.

அவனைப்போல்தான் பல பஸ் கண்டக்டர்களும் சினிமாக் காவலாளிகளும் அலுத்துக்கொண்டிருப்பார்கள். சந்தேகமில்லை.

என்னுடைய சூறாவளிச் சுற்றுப் பிரயாணத்தில் விடுமுறை பற்றி சிலர் விடுத்த அறிக்கைகளைக் கேட்க நேர்ந்தது. அவற்றின் சாரம்:

தாய்; விடுமுறை வந்தாலும் வந்தது; இந்தப் பசங்கள் வேளைக்குச் சாப்பிட வருவதில்லை. வீட்டிலேயே தங்குவதில்லை. என்ன விடுமுறையோ? எப்போது பள்ளிக்கூடம் திறக்குமோ?

தபால்காரர்: என்னடா காரணம், கொஞ்ச நாளாக நமது பாரம் அதிகமாக இருக்கிறதே என்று பார்த்தேன். விடுமுறை தானா விஷயம்? இது சகஜம்தான். வருஷா வருஷம் இந்த மாதங்களில் தான் பத்திரிகைகளுக்குக் கதைகள் போவதும் அங்கிருந்து வருவதும் ரொம்ப அதிகம் என்பதை நான் சொல்லவேண்டுமா என்ன?


சினிமா மானேஜர்: என்ன பிரதர். நல்ல படம் வரவில்லை என்று குறைப்படுகிறார். விடுமுறை முடியட்டும். காலேஜ் பள்ளிக்கூடம் எல்லாம் திறந்ததும் நிறைய நல்ல படங்கள் காட்டுகிறோம்.

பி.ஏ. தேறிய மாணவன்: போயிற்று. விடுமுறை இன்பமும் மாணவ வாழ்க்கையுமே போயிற்று. இனி வேலை தேட வேண்டியதுதான்.

தோற்ற மாணவன்: விடுமுறை நடுவில் இந்தப் பரீட்சை முடிவுகளை அறிவித்து ஏனோ என் ஜாலி வாழ்க்கையைக் கெடுக்கிறார்கள்!

ஆபீஸ் பையன்: ஸார் இந்த வெயிலில் என்னால் இருபது தடவை சர்பத் வாங்கிவர முடியாது. ஒன்று ஒரு மாசம் லீவு கொடுங்கள். இல்லாவிட்டால் என்னையும் உதவியாசிரியராக்கி விடுங்கள்.

..



# பாடுவோமே!

எ. ந. கணபதி

பாடுவோமே - துள்ளி
ஆடுவோமே
பரீட்சை முடிந்ததென்று
பரவச மாக நாமும் (பாடுவோமே)

வீட்டுக் கணக்குப் போடும்
தொல்லை விட்டதே - கெட்ட
விளக்கெண்ணெய்ப் பாடங்களின்
தொல்லை விட்டதே
ஏட்டை இடுப்பில்கட்டிப்
போட் டாச்சுதே - எங்கள்
இதயமெல்லாம் இன்ப
வெறி கொள்ளுதே (பாடுவோமே)

எங்கும் விடுமுறை
என்பதே பேச்சு - நாம்
எங்கெங்கோ ஊர்ப்பயணம்
கிளம்ப லாச்சு
பொங்கும்நம் மகிழ்ச்சிக்கு
எல்லைதான் உண்டோ - இந்தப்
பூமியில் விடுமுறைக்கே
ஈடுதான் உண்டோ? (பாடுவோமே)

புதுபுதுத் திரைப்படம்
பார்க்க லாச்சுதே - நாம்
பொழுதுக்கும் மாந்தோப்பைச்
சுற்ற லாச்சுதே
கொதிக்கும் வெயில் எரிக்கும்
கோடை வந்ததே - நாம்
கோடைக்கானல் செல்லுகின்ற
காலம் வந்ததே (பாடுவோமே)

எட்டு மணிக்குக் காலை
எழுந்திருப் போம் - அதை
ஏனென்று கேட்போரை
நிந்தனை செய்வோம்!
கட்டையும் காவலையும்
உடைத்தெறி வோம் - இன்பக்
களிப்புடன் விடுமுறையை
அனுப விப்போம்! (பாடுவோமே)

# நீங்களும் நானும்

[இந்தப் பகுதியில் உங்களுக்குத் தோன்றும் சந்தேகங்களையெல்லாம் கேட்கலாம். எனக்குத் தோன்றியவைகளைச் சொல்கிறேன். வேடிக்கை விளையாட்டுக் கேள்விகளாக இருக்கலாம்; ஆனால் பிறரைப் புண்படுத்தாத முறையிலும், கூடுமானவரையில் உங்களுக்குப் பயன் படக்கூடிய கேள்விகளாகவும் கேளுங்கள். —ஆர்வி.]

**இரா. பக்கிரிசாமி, பட்டுக்கோட்டை**

கே: சூயஸ் கால்வாய் இப்போது யாருடைய ஆதிக்கத்தின் கீழ் இருக்கிறது?

ப: எகிப்தின் ஆதீனத்தின் கீழ். ஜனாதிபதி நாஸர்தான் இதற்குப் பொறுப்பாளி.

**எஸ். எப். எம். நிலாம், கொழும்பு-12**

கே: இந்தியர்களை இலங்கை அரசாங்கம் வெளியேற்றுவதன் நோக்கம் என்ன?

ப: சுயநல நோக்கந்தான்.

**ம. ராஜண்ணன், பாலக்கோடு**

கே: மனிதன் எப்போது மேன்மை பெறுகிறான்?

ப: தன்னலம் மறுக்கும்போது.

**ஆர். திருநாவுக்கரசு, கணபதி**

கே: மாதவி விலைமகளாக இருந்தும் கோவலனை உள்ளன்போடு நேசித்தாள். அவன் இறந்ததும் தவக்கோலம் பூண்டாள். ஆகவே கடமைப்பட்ட கண்ணகியைவிட மாதவியின் கற்புத்தான் சிறந்தது என்பது என் கருத்து. உங்கள் கருத்து என்ன?

ப: மாதவி செய்த தவத்துக்குப் பிராயச்சித்தமாகவும் தவக்கோலம் பூண்டிருக்கலாம் என்பது தான். இந்த விஷயங்களில் ஒரு முடிவு காண்பது அத்தனை எளிதல்ல.

**கே. ராமசாமி, கல்கத்தா - 29**

கே: நமது பிரதம மந்திரி நேருவுக்குப் பெருமை தரக்கூடியவற்றில் சிறந்தது எது?

ப: மகாத்மா காந்தியடிகள் அவரை தம் வாரிசு என்று அறிவித்ததைவிடப் பெருமை தரத்தக்கது வேறு எதுவுமே இல்லை. அதற்கு ஈடான பெருமையோ, புகழோ, புலமையோ வேறு இல்லை.

**டி. வேங்கடாசலம், பறங்கிப்பேட்டை**

கே: நண்பரே, நீங்கள் தனிக் கட்டையா, அல்லது....?

ப: நான் தனிக் கட்டைதான்; ஆனால் எனக்குக் குடும்பம் என்பது உண்டு.

**வி. எஸ். சுந்தரம், பங்களூர்த் தண்டு**

கே: உணவு எப்படி இருக்க வேண்டும்?

ப: ருசியாக இருக்க வேண்டும். ஆரோக்கியமும் தருவதாக இருக்க வேண்டும்.

**ஆர். நாராயணமூர்த்தி, தாம்பரம்**

கே: சினிமா நல்லதா, கெடுதலா?

ப: பணம் சம்பாதிப்பதையே குறியாகக் கொண்ட சினிமா கெடுதலானது. பண்பு வளர்ப்பதையே குறியாகக் கொண்டது நல்லது. அது அந்தச் சாதனத்தைப் பயன்படுத்தும் விதத்தைப் பொறுத்திருக்கிறது.

**வி. ஆர். குமார், சென்னை-4**

கே: பழங்களில் ஆரஞ்சு, ஆப்பிள் இவற்றில் சிறந்தது எது?

ப: ஆரஞ்சு. அதில் இருபத்து மூன்று உணவுச் சத்துக்கள் இருக்கின்றன.

**ஆர். கண்ணன், வேலூர், வ.ஆ.**

கே: அமெரிக்காவில் படிக்கும் போதே மாணவர்கள் சம்பாத்தியமும் செய்ய முடியுமாமே?

ப: ஆம். தம் படிப்புக்கு ஆகும் செலவைத் தாமே சம்பாதித்துக் கொண்டு பெற்றோருக்குப் பாரத்தைக் குறைக்கிறார்கள். ஆனால் இங்கே கட்சி அரசியலில் கலந்து கட்சிகளையும் பாழாக்கி, தம் படிப்பையும் குழப்பிக்கொண்டு, பெற்றோருக்குச் சுமையாக விளங்குபவர்கள்தான் அதிகம். ஜனாதிபதி ராஜேந்திரப் பிரசாத் தம்முடைய

காலேஜ் சம்பளத்தை ஒரு ஜட்ஜ் மகனுக்கு 'டியூஷன்' சொல்லிக் கொடுத்துச் செலுத்தி வந்தாராம்!

கே. பி. காதர் உசேன், தென்னூர்

கே: கண்ணன் அட்டைப் படத்தில் பிரசுரமாகும் தங்கை தம்பிமார்கள் யார்? உங்கள் சொந்தக்காரர்களோ?

ப: எனக்கு இத்தனை தங்கை தம்பிமார்களும் சொந்தமென்றால் இந்த நாடடில் பெரும் பகுதி எனக்குச் சொந்தமாக இருக்க வேண்டுமே!

ஏ. வி. சுந்தரராமன், மாம்பலம்

கே: ஹலோ, மிஸ்டர் வென் கட், நம்பள் யார் தெர்லே? என்ன மேன், சௌக்கியமா?

ப: ஹலோ, எப்ப மேன் வந்தீர்கள் கீழ்ப்பாக்கத்திலிருந்து? வெயில் காலம் போகல்லே போல் இருக்கிறதே!

பி. எம். ரஹீம், மூணார்

கே: தமிழ் நாட்டில் இப்போதுள்ள துப்பறியும் எழுத்தாளர்களில் சிறந்தவர்களைக் கூறுங்கள்.

ப: அவசரப்பட்டால் நடக்காது. இதைத் துப்பறிந்துதான் கூற வேண்டும்.

எம். பாலசுப்பிரமணியன், கடம்பத்தூர்

கே: கண்ணகி, மாதவி, கோப் பெருந்தேவி ஆகிய மூவரில் கோப் பெருந்தேவிதான் கற்புக்கரசி என்கிறார் நண்பர். நான் இல்லை என்கிறேன். தங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: இது பெரிய தலைவலியாகப் போய்விட்டது என்று கூறுகிறேன் நான். ஒருவர்தான் கற்புக்கரசி என்றால் மற்றவர்களை நீங்கள் என்னவென்று நினைக்கிறீர்கள்? கற்பு என்கிற பண்பில் மாற்றுக் குறைவு - அதிகம் உண்டென்று உங்களுக்கு ஏன் வீண் கலக்கம்?

க. சு. தேவராஜன் சிறு தையூர்

கே: தமிழ் நாட்டில் உள்ள எதிர்க்கட்சிகளில் உள்ள சிறந்த பேச்சாளர், எழுத்தாளர்....

ப: இரு, இரு..யாருக்கு எதிர்க் கட்சி? அதைச் சொல் முதலில்!

வே. பாஸ்கரன், ஜயங்கொண்டான்

கே: குற்றவாளி எப்போது தன் குற்றத்தை உணருகிறான்?

ப: குற்றம் செய்யாமல் அகப் பட்டுக்கொள்ளும்போது.

தும்பி, யாழ்ப்பாணம்

கே: எது அறிவுடைமை?

ப: முட்டாளுடன் விவாதம் செய்யாமல் இருப்பது. விவாதம் செய்தால் யார் முட்டாள் என்று பார்க்கிறவர்களுக்குப் புரியாமல் போய்விடும்.

எம். மாசிலாமணி, சென்னை-4

கே: நல்ல குழந்தைப் பத்திரிகை அதிகம் இல்லையே என்று சர்க்காரே முன்வந்து ஒரு குழந்தைப் பத்திரிகை ஆரம்பிக்கவேண்டும் என்று கூறப்படுகிறதே....

ப: கூறுவதற்கு என்ன? நல்ல எழுத்தாளரோ நல்ல ஆசிரியர்களோ அதிகம் இல்லை என்று தெரிந்துதான் கூறப்படுகிறதா என்று எனக்குச் சந்தேகம். இருப்பவர்களில் பெரும்பாலோர் தாமே மேடையைக் கட்டி, தாமே மாலையை வாங்கி, தாமே மேலே போய் நின்று போட்டுக்கொள்பவர்களாக இருந்தால் புதிய பத்திரிகை ஆரம்பித்துத்தான் என்ன பயன்? இருக்கிற கும்பலோடு அதுவும் சேரவேண்டியதுதான்!

கே. எம். புருஹானுதீன், திட்டச்சேரி

கே: பறவைகளுக்குள்ளே மிகப் பெரியது எது?

ப: நெருப்புக் கோழி.

தங்கராஜன், மேல் வளவு

கே: நாட்டுப்பற்றும் மொழிப் பற்றும் இல்லாத ஒருவனை எப்படி அழைப்பது?

ப: பூமிக்குப் பாரம், சோற்றுக் குக் கேடு என்று.

எஸ். நீலகண்டன், நாகர்கோயில்

கே. மறுபிறப்பு என்பது உண்மையா, கற்பனையா?

ப: விஞ்ஞான ரீதியாகக்கூட மறு பிறப்பு உண்டு என்பதை மறுக்க முடியவில்லை. பல மதங்கள் ஒப்புக்கொள்கின்றன. ஒன்றும் புரியாத பகுத்தறிவுவாதி கற்பனை என்கிறான்.

211807



வி. கே. கிருஷ்ணன், கோவை

கே: உலகமே பணம் என்கிற ஒரே வார்த்தைக்குள்தானா அடக்கமா?

ப: ஒரு பகுதிதான் அப்படி, மறுபகுதி பணம் இல்லை என்பதில் அடக்கம்.

ஏ. ராஜாங்கம், மாங்குடி

கே: அகில இந்திய வானொலியைப்பற்றி உங்கள் கருத்து என்ன?

ப: அதை மட்டும் தயை செய்து சொல்வதற்கில்லை. நாளைக்கு நீ ஒரு பெரிய சிபாரிசு பிடித்து, ஒரு புதிய பதவியை ஏற்படுத்திக் கொண்டு, எல்லாரையும் பார்த்து "ஹூம்!" என்று கனைக்கும் அதிகாரம் பெற்றுவிட்டால், கருத்துக் கூறிய என்மேல் கரு வைத்துப் பழி வாங்கவா?

எஸ். இந்திரா, இராயப்பேட்டை

கே: அமெரிக்கர்களிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியது என்ன? கற்றுக்கொள்ளக் கூடாதது என்ன? ரஷ்யாவிடமிருந்து-?

ப: கற்றுக்கொள்ள வேண்டியது நாசுக்கான பேச்சு; கற்க வேண்டாதது அந்தப் பேச்சின் விஷயம். ரஷ்யாவிடமிருந்தும் மேற்படி.. மேற்படிதான்.

எஸ். கே. சீனிவாசன், ஸ்ரீவில்லிப்புத்தூர்

கே: முகப்பருவைப் போக்க ஸ்நோ பயன்படுமா?

ப: பயன்படாது. வேறு சில இயற்கை வைத்தியமுறைகள் இருக்கின்றன. வைத்தியர்களைக் கேள்.

எஸ். ராமநாதன், சென்னை – 2

கே: மலிவுப் பதிப்பைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: அதைப்பற்றி நான் நினைப்பதையெல்லாம் வெளியில் சொல்வது அத்தனை உசிதமல்ல. வியாபாரத்தில் நாலுந்தான் இருக்கும். இப்பொழுது அது ஒருவகை வியாபாரமாகிவிட்டது. யாரோ கொடுக்கிருர்கள்; யாரோ, எதற்கோ செய்கிருர்கள்! நாட்டு மக்களுக்கு உண்மை தெரியாமலா இருக்கிறது? அத்துடன் விலை மலிவைப்போல் பிழைகள் மலிந்திருப்பதையும் கண்டு, படிக்கிறவர்கள் பேசாமல் தான் இருக்கிருர்கள். ஆகவே, நான் நினைப்பது, அதைச் சொல்வது என்பது தற்போதைக்குச் சரியல்ல.

ப. சாந்தலிங்கம், கூரனூர்

கே: உணவு, உரிமை இந்த இரண்டில் மனிதனுக்கு எது மிக முக்கியம்?

ப: முதலில் உணவுதான். அது வயிற்றில் விழுந்த பிறகுதான் உரிமையைப்பற்றி யோசிக்க முடியும்.

எம். ஆர். லக்ஷ்மீபதி, சென்னை-7

கே: நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்க வேலையை முன்பே தொடங்கினுர்களே—

ப: முன்பு பரிசோதனைகள் நடைபெற்றன. இப்பொழுதுதான் அந்தத் திட்டத்தை ஏற்று, பழுப்புநிலக்கரி வெட்டி எடுக்கும் வேலையைத் தொடங்கியிருக்கிருர்கள். நிலக்கரி படிந்துள்ள இடத்தில் மண்ணை வெட்டும் பெரிய இயந்திரங்களை நேரு அவர்கள் இப்போதுதான் முடுக்கிவிட்டார்.

பி. கோபிநாதன், ஆம்பூர்

கே: இன்பத்தையும் துன்பத்தையும் இரவுக்கும் பகலுக்கும் ஒப்பிடலாமா?

ப: வேண்டாம். அதை ரெயில்வே தண்டவாளத்துக்கு ஒப்பிடலாம். இன்பத்தில் ஒரு சக்கரமும் துன்பத்தில் ஒரு சக்கரமும் கொண்டு உருளுவதுதான் வாழ்க்கை ரெயில்.

ஏ. எப். ஹாஜி முகம்மது, நாச்சியார் கோயில்

கே: கண்ணன் தினசரிப் பத்திரிகை ஒன்று வெளியிட்டால் என்ன?

ப: வீட்டுக்குத் தெரியாமல் மளிகைக் கடைக்குப் பேப்பர் விற்கலாம் என்று ஆசைப்படுகிருயோ?

ந. சாந்தா, நெய்வேலி

கே: ஒருவன் எத்தனை கலைகளைக் கற்கவேண்டும்?

ப: அப்படி ஒன்றும் நிபந்தனை இல்லை, அம்மா. கற்பதைக் கசடறக் கற்கவேண்டும். ஒருத்தி எத்தனை கற்கவேண்டும் என்று கேட்காமல் ஒருவன் என்று கேட்கிருயே, அத்தனை கலைகளைக் கற்றவனுக்குத்தான் மாலையிடுவதென்று சபதம் கிபதம் செய்துவிடாதே!

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

புதிய நாணய விகிதப்படி

# கண்ணன் வெளியீடுகள்

ஐந்து வயது முதல் பதினறு வயது வரையில் உள்ளவர் களுக்காகப் பல அழகான கண்ணன் வெளியீடுகள் உள்ளன. இதோ அந்தப் பட்டியல்:—

| | | | ரூ. நயா பைசா |
|---|---|---|---|
| 1. | லீடர் மணி - ஆர்வி | .. | 1.50 |
| 2. | சந்திரகிரிக் கோட்டை - ஜஞ | .. | 1.25 |
| | அசட்டுப் பிச்சு - ஆர்வி | .. | 1.00 |
| | சின்ன ராஜா - வாசகன் | .. | 0.75 |
| | ...ழவல்லி - கி. ரா. | .. | 0.75 |
| | ...ளயும் பயிர் - கி. வா: ஜ. | .. | 0.50 |
| | ...ர்த்து மைஞ - தி. ஜ. ர. | .. | 0.50 |
| | ...யுச் சங்கு - நீலம் | .. | 0.50 |
| | ... ஆர்வி | .. | 0.50 |
| | ... - ஆர்வி | .. | 0.50 |
| | ...கரை மாளிகை - ஜஞ | .. | 0.50 |
| | ...ல் அரக்கன் - ஜஞ | .. | 0.50 |
| | ...வும் குருவியும் - 'சோமசன்மா' | .. | 0.50 |
| | ...தும் கிளியும் - 'சோமசன்மா' | .. | 0.50 |
| | ...ளேயும் காளையும் - 'சோமசன்மா' | .. | 0.50 |
| | ...விஞ்ஞானம் பேசுகிறுர் பெ. நா. அ... | .. | 0.50 |
| | பாரஸீக ரோஜா - ஆர்வி: ஸாமி | .. | 0.32 |
| 18. | தூங்கும் அழகி - ஆர்வி: ஸாமி | .. | 0.25 |
| 19. | குளிகைத் தீவு - ஆர்வி: சங்கர் | .. | 0.25 |
| 20. | மாஸ்டர் பாலகுமார் - ஆர்வி: ஸாமி | .. | 0.25 |
| 21. | நீச்சல் பழக்கம் - டிமான்ஸ்டிரேட்டர் | .. | 0.20 |
| 22. | பார்வதியும் ஏழு சித்திரக்குள்ளர்களும் - எஸ். ஜே. | .. | 0.20 |
| 23. | கோழி விதைத்த நெல் - சூடாமணி | .. | 0.20 |
| 24. | தங்கத்தின் பந்து - சூடாமணி | .. | 0.20 |
| 25. | என் பேர் என்ன? - சூடாமணி | .. | 0.20 |
| 26. | கவிஞர் கதை - கி. வா. ஜ. (அச்சில்) | .. | |
| 27. | தங்க மாம்பழம் - ராஜி (அச்சில்) | .. | |
| 28. | புலிக் குட்டி - ஆர்வி: ஸாமி (அச்சில்) | .. | |

சந்தாதார்களுக்குக் கமிஷன் உண்டு.

**கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை -4.**

(Regd. as Newspaper in Ceylon.) Reg. No. M. 5542



## கண்ணன்

# சித்திரப் போட்டி

கண்ணன் பத்திரிகையில் உங்களுக்காகப் புதிய சித்தி ஒன்றை வெளியிடுகிறோம். கதை, கட்டுரைப் போட் கொண்ட உங்களுக்கு இந்தப் போட்டி மிகவும் மகி நம்புகிறோம்.

இந்தப் போட்டியில்—

★ ஐந்து வயது முதல் பதினாறு வயதுவ கள்தான் கலந்துகொள்ளலாம்.

★ படங்கள் அனுப்புபவர்கள் தொடர்ந் இதழ்களில் வெளிவரும் கண்ணன் கழக களில் மூன்றைப் பூர்த்திசெய்து பட இணைத்து அனுப்பவேண்டும்.

★ படங்கள் டிராயிங் பேப்பரில் ஒரே வரையப்பட் டிருக்கவேண்டும்.

★ படங்களுக்கு உங்க க்குப் பிடித்தமான, பொ தமான தலைப்பை களே கொடுக்கவேண்டும்.

★ வர்ணப் படங்கள் அ ப்புபவர்கள் வாட் ர் கலர் பெயிண்டைதான் கொடுக்கலாம். வேறு வகை வர்ணங்கள் உபயோகப்படுத்தலாகாது.

★ ஒருவர் மூன்று படங்கள் வரையில் அனுப்ப ம்.

★ ஜூன் மாதம் 30 ஆம் தேதிக்குள் படங்களை எங்களுக்குக் கிடைக்கும்படி அனுப்பவேண்டும்.

இவ்வளவுதான் நிபந்தனைகள். பரிசுக்குரிய படங்களை, கலைமகள் கண்ணன் ஓவியக் குழுவினர் பரிசீலனை செய்வார்கள். இந்தப் போட் சம்பந்தப்பட்ட மட்டில் ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. படங்களுக்கு பின்புறத்திலோ அடியிலோ உங்கள் வயசு, பெற்றோர், விலாசம் முதல் வற்றைத் தெளிவாகக் குறிப்பிடவேண்டும். தேர்ந்தெடுக்கப் படா படங்களைத் திரும்பப் பெற விரும்புவோர் போதிய தபால் தலை வை திருக்கவேண்டும்.

மொத்தம் வயதுவாரியாக ஆறு பரிசுகள் உண்டு. மற்றவை பி சுரத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படலாம். அதற்கும் உரிய சம்மானம் உண்

கண்ணன் சித்திரப்போட்டி முடிவு ஜூலை 15-ஆம் தே இதழில் வெளியாகும்.